padippakam


# அகதி

இதழ் 12 : செப்டம்பர் 1998





சந்திரிகா குமாரதுங்கா



வே. பிரபாகரன்

15/-

## எம்முடைய தாயகமும் வடக்கே!

padippakam

padippakam

# விடுதலைக்கு ஒரே வழி..........!

இன்று நான் அனைத்து பிரச்சினை களையும் விட்டு உங்களிடம் ஒரு முக்கியமான முதன்மையான விஷயத்தைக் கூற விரும்புகிறேன். அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்குடன் செவி மடுத்துக் கேளுங்கள்

விடுதலை-வெற்றிக்கான ஒரே வழி அதில்தான் உள்ளது. அது இன்றி நீங்கள் 'விடுதலை' அடைய முடியாது. நீங்கள் அந்த முதல் கட்டத்தைக் கடக்கவில்லையானால் இறை கோபம் உங்கள் மீது தனியாது. பிறகு நீங்கள் ஒரு போதும் செழிப்படைய மாட்டீர்கள். நீங்கள் விரும்பியதை அடையவும் மாட்டீர்கள்.

***அந்த விஷயம் என்ன?***
***அதுதான் தவ்பா - பாவமன்னிப்பு!***

உங்கள் வலிமைகள் ஆற்றல்கள் அனைத்தையும் கொண்டு அந்த அல்லாஹ்விற்கு முழுமையாகப் பணிந்திட வேண்டும். கண்ணீர் சிந்தி அழவேண்டும். அவன் முன் அஞ்சி நடுங்கிட வேண்டும். எந்த அளவுக் கெனில் உங்கள் மீது அவனுக்கு அன்பு வந்துவிட வேண்டும். உங்களை அரவணைத்துக் கொள்ள வேண்டும். முன்பு வழங்கியிருந்ததையெல்லாம் மீண்டும் அவன் உங்களுக்கு வழங்கிட வேண்டும்.

நீண்ட காலம் அலட்சியத்தில் மூழ்கி அதன் விபரீதத்தை அனுபவித்து விட்டீர்கள். பல நூற்றாண்டுகளாய் இறைவனுக்கு மாறு செய்து அதன் கசப்பை சுவைத்து விட்டீர்கள். பாவக் கனிகளை மடி நிறைய அள்ளிக் கொண்டீர்கள். ஏக இறைவனின் வாயிலில் தலை சாய்ப்பதற்குப் பதிலாக அவனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய எழுந்தீர்கள். உலகமே உங்களுக்கு எதிராக எழுந்ததைப் பார்த்துக் கொண்டீர்கள். அந்த அல்லாஹ்விற்கு வெறுப்பூட்டும் செயல்களில் ஈடுபட்டீர்கள். உலகம் முழுவதும் உங்களை எப்படி வெறுக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டீர்கள்.

இப்பொழுது அந்தத் தவறுகளை விட்டு விலகி நில்லுங்கள். பாவங்கள் செய்து சோதனைமிக்க வாழ்வை அனுபவித்து விட்டீர்கள். இப்பொழுது இறைவனுக்கு அடிபணிந்து நேர்மையான வாழ்வை அனுபவித்துப் பார்க்கலாம்.

இறைக் கட்டளைகளுக்கு மாறு பட்டு நடப்பதன் விளைவைச் சுவைத்து விட்டீர்கள். இப்பொழுது அவனுக்கு பணிந்து வாழ்வதன் இன்பத்தைச் சுவைத்துப் பார்க்கலாம்.

இறைவனை விட்டு மற்றவர் களுடன் தொடர்பு கொண்டு அதன் விளைவுகளை அனுபவித்து விட்டீர்கள். வாருங்கள்! இப்போது அந்த ஏகனுடன் மட்டும் தொடர்பு வைத்துப் பார்க்கலாம்.

அந்த அல்லாஹ்வின் தொடர்பை கை விட்டதால் இழப்புக்கும் நிரா சைக்கும் ஆளாகி அடி உதை பட்டீர்களோ அந்த ஏகனிடமே திரும்பி விடுவோம். அவனுடனேயே தொடர்பு கொண்டு வாழ்வோம்.

உடனடியாக இறைவனிடம் பாவ மன்னிப்பு கேளுங்கள் அவனுக்கு முழுமை யாகப் பணிந்து வாழ முன்வாருங்கள்.

*மௌலானா அபுல்கலாம் ஆஸாத் (றஹ்)*

படிப்பகம்

padippakam

A. PARTHIPAN



# நமது அகதி


# அகதி

இதழ் 12 செப்டம்பர் 1998



தொடர்புகள்

**வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு**

**15 A, ரோஹினி வீதி, கொழும்பு 6.**

**ஸ்ரீ - லங்கா**

**தொலைபேசி : 593523**

**பெக்ஸ்: 586660**



## "AHATHI"

*Published by*

**NORTHERN MUSLIMS' RIGHTS ORGANIZATION**

*15A, Rohini Road*

*Colombo - 6*

*Sri Lanka*


**இச்சஞ்சிகையில் வெளியாகும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியோரே பொறுப்புடையவர்கள்.**

## நிவாரண வெட்டினை நிறுத்து!

நீண்ட ஒரு இடை வெளியின் பின் மீண்டும் அகதியில் உங்களுடன் எம்முடைய கருத்துக்களைப் பறிமாறுவதில் மிக்க மகிழ்ச்சி.

NMRO வட மாகாண முஸ்லிம் அகதிகள் தொடர்பான பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்தும் வேலைகளில் முழு மூச்சாக ஈடுபட்டதுவும் நிதியின்மையுமே அகதியின் தாமதத்திற்கு காரணங்களாகும் இதையிட்டு வருந்துகின்றோம்.

அகதி வெளியீட்டுக்கான கால இடைவெளியில், அரசியல், இராணுவ ரீதியாகப் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான மாற்றங்கள் எதுவும் வடபுல முஸ்லிம் அகதிகள் வாழ்வில் குறிப்பிடக் கூடிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தி விடவில்லை. அகதிகள் தொடர்ச்சியாக பல கோரிக்கைகளை அரசிடம் முன் வைத்து வந்த போதிலும் அவற்றையெல்லாம்



படிப்பகம்

padippakam



ஒரு புறம் தூக்கி வீசி விட்டு அகதிகளின் ஒரே ஒரு துரும்பாக இருந்த உலர் உணவு நிவாரணத்தில் அரசு இன்று கை வைத்துள்ளது.

வெற்றி நிச்சயம் இராணுவ நடவடிக்கை வெற்றி பெறாமலே இருப்பதினால் யுத்தச் செலவு 6,000 மில்லியன் ரூபாய்களைத் தாண்டிவிட்ட நிலையில் அரசு அகதிகளுக்கான நிவாரணம் பெறும் குடும்பத்தில் 32% தை வெட்டியுள்ளது. இதன் காரணமாக மாவட்ட செயலாளர்கள், அகதி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையை 30-40 வீதத்தால், குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள்.

இந்த நிவாரண வெட்டு நடவடிக்கையால், கிட்டத்தட்ட ஏழு இலட்சம் அகதிகள் பாதிப்புற்ற போதிலும் வடபுல முஸ்லிம் அகதிகள் மீது இதன் தாக்கம் மிகப் பாரியதாகும். இம்மக்கள் சுயவிருப்பின் பேரில் இங்கு வரவில்லை. தமது தாயக மண்ணிலே இவர்களைப் பாதுகாக்கத் தவறியது ஐ.தே.க. அரசு. அசையும் அசையாச் சொத்து அனைத்தையும் இழந்து 2 மணி நேரத்தில் நிர்க்கதியான அகதிகளுக்கு உலர் உணவு நிவாரணத்தை தவிர வேறெதனையும் வழங்க வில்லை. அரச சார்பற்ற உதவி நிறுவனங்களும் ஊர் பொதுமக்களுமே அகதிகளுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைக்க உதவி புரிந்தார்கள்.

இவ்வகதி மக்கள் தமது தாயக மண்ணில் வாழும் போது எதுவித நிவாரணத்தையுமே எதிர்பார்க்க வில்லை. நிவாரணத்தை வெட்ட முன்வந்திருக்கும் அரசு இவ்வகதிகளை பாதுகாப்பான முறையில் மீளக் குடியமர்த்த என்ன நடவடிக்கை எடுத்தது? அவ்வாறு நடந்திருந்தால் நிவாரணத்தை எதிர்பார்க்க வேண்டிய தேவை இவ்வகதிகளுக்கு ஏற்பட்டிருக்காது. ஓலைக் குடில்களில், கடந்த எட்டு வருடங்களாக அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களுக்காக அரசு உருப்படியான எதனையும் செய்து விடவில்லை. மாற்றமாக புனர்வாழ்வு அமைச்சு, சொந்தக் காணி வாங்கினால் வீடு கட்ட 35,000/- தருவோம் எனக் கூறி முகாம் வாழ்வில் சலிப்புற்றிருந்த மக்களையும், ஒரு சில அகதி முகாம்கள் அமைந்திருந்த தனியார் காணி உரிமையாளர்களின் தொந்தரவில் சிக்கியிருந்த அகதிகளையும், வலையில் வீழ்த்தியது. அப்போது இம்மக்களுக்கு புனர்வாழ்வு அமைச்சர் எக்காரணம் கொண்டும் நிவாரணம் குறைக்கப்படவோ, நிற்பாட்டப்படவோ மாட்டாது, என்ற உறுதி மொழியை வழங்கினார். இன்று இவ்வாக்குறுதி என்னாயிற்று.

வட புலத்திலிருந்து விரட்டப்பட்ட 15,240 முஸ்லிம் குடும்பங்களில் 12,080 குடும்பங்கள் புத்தளம், குருநாகல் மாவட்டத்திலும் ஏனையவர்கள் கொழும்பு, நீர்கொழும்பு, பாணந்துறை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் சிதறுண்டு கிடக்கின்றார்கள். புத்தளம் மாவட்டத்தில் வாழும் 12,080 குடும்பங்களில் 9,431 குடும்பங்களுக்குத்தான் உலர் நிவாரணம் வழங்கப்படுகின்றது. ஏனையவர்கள் அரச தொழில் காரணமாகவும் அவர்களின் செல்வ நிலை காரணமாகவும் நிவாரணம் பெறுவதில்லை.

தற்போது அரசு அமுற்படுத்தி வரும், நிவாரண வெட்டில் 9,431 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு



படிப்பகம்

padippakam



வீடமைப்பு உதவி வழங்கியதாகவும் முழுமையான புனர்வாழ்வு அளிக்கப் பட்டதாக கூறியுமே நிவாரண வெட்டு நடக்கிறது உண்மையில் இதுவரையில் 1,758 பேருக்கு வீடமைப்பு உதவி அளித்துவிட்டு 3,000 குடும்பங்களுக்கு அரசு நிவாரண வெட்டை அமுல் நடத்த முனைந்துள்ளது.

முழுமையான புனர் வாழ்வு என்பது அகதிகளுக்கு தாயக மண்ணில் வீடுகளைக் கட்டிக் கொடுத்து அவற்றிற்கு தேவையான தளபாடங்கள் கொடுத்து தொழில் செய்ய உதவியும் கடனும் அளிப்பதுதான். அதைவிட்டு விட்டு அரைகுறை புனர்வாழ்வு அளித்து விட்டு நிவாரணத்தை வெட்டுவதானது மனித உரிமை மீறலில் உச்சக் கட்டமாகும்.

அகதிகளுக்கு ஏற்ற வகையில் நிவாரணத்தை வழங்குவதற்குப் பதிலாக நிவாரணத்துக்கு ஏற்ற வகையில் அகதி களைக் குறைக்குமாறு கேட்கப்பட்டதானது காலுக்கு ஏற்றவாறு சப்பாத்தை வாங்கு வதற்குப் பதிலாக சப்பாத்துக்கு ஏற்றவாறு காலை சரி செய்வது போன்ற ஒரு நடவடிக்கையாகும்.

வடபுல முஸ்லிம்கள் பாது காப்பான சூழல் தோன்றியதும் மீண்டும் தாயகம் செல்லவே விரும்புகின்றார்கள். வடபுலத்தில் விட்டுவந்த சொத்துக்கள் அனைத்தும் அழிந்து நாசமாகிப் போயுல்லன. இந்நிவாரண வெட்டானது எதிர்காலத்தில் பூர்வீக பிரதேசத்தில் எஞ்சியிருக்கும் சொத்துக்களை புனர மைக்க முடியாமல் செய்துவிடும் அது மாத்திரமின்றி பொருளாதார சிக்கலில் தவிக்கும் அகதிகளின் மத்தியில் இந்நிவாரண வெட்டானது பசியையும் பட்டினியையும் போசாக்கின்மையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

தற்போதும் கூட அரசு வழங்கி வரும் நிவாணரத்தை இன்றைய வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணுடன் ஒப்பிடும் போது அதிகரிக்க வேண்டிய தேவை கடப்பாடு இருக்கின்ற வேலையில் அரசு எடுத்த இம்முடிவானது மிகக் கொடுமையானதாகும்.

இவ்விடயத்தில் புனர்வாழ்வு புணர்நிர்மான அமைச்சர். அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப் எம்.பி வாய்மூடி மௌனமாக இருப்பது, அகதிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. வாய் திறக்க வேண்டிய நேரத்தில் வாய்மூடி மௌனம் காக்கும் அமைச்சர் யாருக்காக குரல் கொடுக்கப் போகிறார்? ■

> “ஒருவர் அகதியாவதற்கு நீ பொறுப்பாளியல்ல.
> ஆனால் அவர் தொடர்ந்து அகதியாக
> இருப்பதற்கு நீயும் பொறுப்பாளி”
>
> – ஐ.நா.ஸ்தானிகராலயம் வெளியிட்ட சுவரொட்டிலிருந்து



படிப்பகம்

padippakam



## .இலங்கை, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கா அவர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கும், வடக்கு முஸ்லிம் அகதிகளின் பகிரங்க மடல்.

இலங்கை எனும் சிறு நாட்டில் கடந்த நான்கு தசாப்தங்களாக இருந்து வந்த இன முரண்பாடு, இன மோதல்களாக மாறி இதன் பரிணாமமாக இன்று உக்கிரமான உள்நாட்டு யுத்தம் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த யுத்தத்தினால் இதுவரையில் அறுபதினாயிரத்துக்கும் அதிகமான சாதாரண பொதுமக்கள் உயிர் இழந்துள்ளனர். மேலும், நாடு முழுவதும் 370 அகதி முகாம்களில் 39 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 152 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகின்றனர். மேலும் நண்பர்கள், உறவினர் வீடுகளிலும் பலஆயிரக் கணக்கான அகதிகள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கைக்கு வெளியேயும் பல நாடுகளில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இதனைத் தவிர பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிந்து நாசமாகியுள்ளது. நாட்டின் அபிவிருத்திக்காக செலவிடப்பட வேண்டிய பணம் வீணான இந்த யுத்தத்திற்காக செலவிடப்படுகிறது. இன்று நாடு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு யுத்தத்தின் காரணமாகவே அகதிகளாகியுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தைக் கூட நிறுத்தி விடுவதற்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

இந்நாட்டின் சகல மக்களும் யுத்தத்தின் தாக்கத்தை அனுபவித்து வருகின்றனர். யுத்தத்திற்கு வழி வகுத்த இன முரண்பாடினால் தேவையற்ற முறையில் இழுக்கப்பட்டவர்களே வடமாகாண முஸ்லிம்கள். இவ்வாறான கொடூர யுத்தம் உடனடியாகவே நிறுத்தப்பட வேண்டும்.

இரு சாரருக்குமிடையில் இடம் பெறும் சமாதானப் பேச்சுக்களில் வட பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் அபிலாஷைகளும் ஆராயப்பட்டு நல்ல முடிவுகள் எடுக்கப்படுவது அவசியமாகும்.

கடந்த எட்டு வருடங்களாக வட பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் நாட்டின் பல பாகங்களிலும் அகதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் 165 முகாம்களில் சொல்லொனாத் துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள்.

வடமாகாண முஸ்லிம்கள் தமது தாயக பூமியான வடக்கிலே சென்று வாழும் அந்நாட்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதுபோன்றுதான் அகதிகளாக அல்லலுரும் ஒவ்வொருவரும் தத்தமது தாயக மண்ணில் நிம்மதியாக வாழும் நாள் எப்பொழுது வரும் என அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே, வடக்கு முஸ்லிம்களுக்காகவும், நிம்மதியின்றி நாட்டில் வாழும் சகல மக்களுக்காகவும் தற்பொழுது நடத்திக் கொண்டிருக்கும் யுத்தத்தை நிறத்தி பேச்சு வார்தையைச் செய்து சுமுகமாக சகலரும் உரிமைகளுடனும் பாதுகாப்புடனும் வாழும் செழிப்பும் வளமும்முள்ள நாடாக இலங்கையை ஆக்க முன்வாருங்கள். எதிர்வரும் புதிய ஆண்டு எங்களது தாயக மண்ணிலேயே எங்களுக்கு மலர வேண்டும்.

யுத்தத்தின் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக வரலாறு இல்லை. யுத்தம் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். நடக்கும் யுத்தம் தொடருமானால் யுத்தம் தொடர்ந்து நடப்பதற்குக் காரணமானவர்கள் கூட யுத்த அரக்கனுக்கு பலியாகிவிட முடியும்.

வடமாகாண முஸ்லிம்கள் தங்களது அகதி வாழ்வின் எட்டாவது ஆண்டில் முன்வைத்திருக்கும் இக் கோரிக்கையானது உங்கள் இருவரையும் சமாதானப் பேச்சு வார்த்தையின் பக்கம் விரைந்து கொண்டு செல்லும் என முழுமையாக நம்புகின்றோம்.

**சமாதானம் பிறக்கட்டும் - புதுயுகம் தோன்றட்டும்.**
**நாட்டில் சகல பிரஜைகளும் அன்புடனும் ஐக்கியப்பட்டு வாழ வழி பிறக்கட்டும்.**

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

படிப்பகம்

padippakam



# இலங்கையின் இனப்பிரச்சினையும் வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலமும்

யாழ்.எம்.எஸ்.ஏ.காதர்

**அகதி இதழ் 11 ஜூன் 1997ல் நடத்திய கட்டுரை கவிதைப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கட்டுரை**

மேற் கூறப்பட்ட விடயத்தை நாம் ஆராய முனையும் போது இனப் பிரச்சினையின் தொடர்ச்சியாகவே யுத்தம் ஏற்பட்டது என்பதையும், யுத்தத்தின் தொடர்ச்சியாகவே வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர் என்பதையும், வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டதின் தொடர்ச்சியாகவே அவர்களது எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம் என்ற ரீதியில் இக் கட்டுரை தொடர்பாக பின்வரும் இரண்டு விடயங்களைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

1. இனப் பிரச்சினை என ஒன்றில்லாவிடில் வட மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்து ஆராய வேண்டிய அவசியம் இருக்காது.
2. இனப் பிரச்சினை குறித்தும் வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்தும் ஆராயும் போது இன்றைய யுத்தம் பற்றியும், வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் ஆராய்வது தவிர்க்க முடியாத விடயங்களாகும். எனவே இக் கட்டுரையானது.
   (1) இனப் பிரச்சினையின் தோற்றம், அதன் பரிணாம வளர்ச்சி.
   (2) யுத்தம் எவ்வாறு தோன்றியது, அதன் விளைவுகள்.
   (3) வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமையும், அவற்றிற்காக கூறப்பட்ட காரணங்களும்.
   (4) வட மாகாண முஸ்லிம்களின் அன்றைய நிலை, தற்போதைய நிலை, எதிர்காலம் என நான்கு பிரிவுகளாகவும் ஆராய்தல் இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## இனப் பிரச்சினையின் தோற்றம், அதன் பரிணாம வளர்ச்சி

இனப் பிரச்சினை எப்போது ஆரம்பமாகியது என்ற விடயம் தொடர்பாக ஒரு பிரிவினர் சுதந்திர இலங்கையின் ஆரம்பத்தில் இருந்த 5 தசாப்த காலத்தையும், இன்னொரு பிரிவினர் 1956ம் ஆண்டை அடிப்படையாக கொண்டு 4 தசாப்த காலத்தையும் இப் பிரச்சினையின் ஆரம்பம் எனக் கொள்வர். இடதுசாரி மனோபாவம் கொண்டோரும், யு.என்.பி எதிர்ப்பாளர்களும் 1948ம் ஆண்டையும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பாளர்கள் 1956ம் ஆண்டையும் குறிப்பிடுவர். ஆனால் உண்மையிலேயே இவர்கள் வரலாற்றைத் திரிபுபடுத்திக் கூறுகின்றனர் எனினும் இது குறித்து ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில் பெரும்பான்மை சிங்கள மக்கள் சார்ந்த சிலரும், தமிழ் மக்கள் சார்ந்த சிலரும் உண்மையான வரலாற்றை திரிபுபடுத்தும் பிரியத்தனத்தனங்கள் மேற் கொள்ளுவதை அண்மைக் காலமாக அவதானிக்கக் கூடிய விடயமாகவுள்ளது. இலங்கைக்கு முதன் முதலில் வந்தவன் விஜயன் என்றும் வேறு இனத்தவர் இங்கிருக்கவில்லை என்றும் எனவே இந்நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்றும் கூறுகின்றனர். இன்னும் சிலர் இது ஒரு சிங்கள பௌத்த நாடு எனக் கூறுகின்றனர். இதே போன்று விஜயன் வரும் வேளையில் தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்தனர். எனவே இது தமிழருக்கு மட்டுமே சொந்தமானது எனவும், இன்னும் சிலர் திராவிட நாகரீகத்தை தமிழர் நாகரீகம் என்றும், மற்றும் சிலர் சிவனொளிபாத மலை ஆதாம் மலையுமல்ல, பௌத்த தலமுமல்ல, அது சிவ தலமே என்றும் வாதாடுகின்றனர். இவர்

**ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!**

படிப்பகம்

களெல்லாம் பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்புகின்றனர். விற்பனை செய்யப்பட்ட பத்திரிகைகளின் பணம் முதலாளிக்குப் போய்ச் சேருகிறது. உண்மையிலேயே இன்றைய தேவை, பழைய மண்டையோட்டையும், உடைந்த பீங்கான் களையும், நொறுங்கிப் போன பானைகளையும் கையிலேந்திக் கொண்டு பண்டைய பெருமை கூறித் திரியும் மனநோயாளர்களின் புலம்பல் களல்ல. முன்னவர் வாழ்ந்தார். ஆண்டார், மாண்டார் முடிந்தது கதை. இப்போது நமக்குத் தேவைப்படுவதெல்லாம் இந்நாட்டில் நாம் எல்லோரும் ஐக்கியமாகவும், சமாதானமாகவும் அமைதியாகவும் வாழ்வது எவ்வாறு என்பதே யாகும். பண்டைய வரலாற்றுக்கு இன்றைய வேடர்களே சாட்சி. இது தான் உண்மை. **தற்போது இந்நாட்டில் 7 மாகாணங்களில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாகவும், சில மாவட்டங்களில் மலையக தமிழர் பெரும்பான்மையாகவும், வடகிழக்கில் தமிழர் பெரும்பான்மையாகவும் சில மாவட்டங்களில் முஸ்லிம்கள் செறிவாகவும் வாழ்கின்றனர் என்பதுமே இன்றைய கண் கண்ட சாட்சியாகும்.** உண்மையிலேயே இந் நாட்டின் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே இனப் பிரச்சினை ஆரம்பமாகி விட்டது என்பது கசப்பான ஓர் உண்மையாகும். 1915ம் ஆண்டு சிங்கள-முஸ்லிம் கலவரத்தை மூடி மறைக்க ஒரு சிலர் முயற்சிப்பது ஏன்? கம்பளையில் பள்ளிவாசல் ஒன்றைக் கடந்து சென்ற ஒரு ஊர்வலத்தையொட்டியே கலவரம் மூண்டதாக சிலர் கயிறுதிரிக்கின்றனர். ஆனால் உண்மையி லேயே அன்று முஸ்லிம்கள் வர்த்தகத்தில் செல் வாக்குப் பெற்ற சமூகமாக விளங்கியதால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியே கலவரத்தின் பின்னணியாகும். சில சிங்களத் தலைவர்கள் கலவரத்தைத் தூண்டி விட்டனர். அன்று முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட உயிர் இழப்பு, சொத்திழப்பு என்பவற்றை விட ஆயிரக்கணக்கான வர்த்தக தாபனங்கள் கொள்ளையடிக்கப்பட்டு, தீக்கிரையாக்கப் பட்டமை கலவரத்தின் உண்மைக் காரணம் என்ன என்பதை நன்கு துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. பெரும்பான்மைச் சிங்களவரால் ஒரு சிறுபான்மை இனத்திற்கு அநீதி இழைக்கப் பட்ட போது இன்னொரு சிறுபான்மை இனத்தின் தலைவரான சேர்.பொன்.இராமநாதன் ஆற்றிய பங்களிப்பு என்ன? என்பது நாடறிந்த உண்மை. அன்று ஒரு சிறுபான்மை இனத்திற்கு விழுந்த முதல் அடி ஏனைய சிறுபான்மையினங்களுக்கும் என்றோ ஒரு நாள் விழும் என்பதை தூரதிருஷ் டியுடன் உணர்ந்து அவர் செயல்பட்டிருந்தால் நாட்டின் தலைவிதி வேறு விதமாக அமைந்தி ருக்கும். அவருக்கு பிரிட்டிஷார் மத்தியில் இருந்த செல்வாக்கை தகுந்த முறையில் பயன்படுத்தி யிருந்தால், இன்று தமிழ் மக்களுக்கு நிம்மதியான ஒரு வாழ்வு கிடைத்திருக்கும். நல்லதோர் சந்தர்ப்பத்தை தமிழ்த் தலைவர்கள் தவற விட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இதே போன்று தமிழ்த் தலைவர்கள் இன்னொரு கால கட்டத்திலும் இதே தவறை இழைத்தனர். இது பற்றி இக்கட்டுரையின் இன்னொரு பகுதியில் பின்னர் விபரிப்பேன். தம் இனத்தையே பல சாதிகளாகப் பிரித்து, அடக்கி ஒடுக்கி வைத்திருந்த சேர்.பொன். இராமநாதன் போன்றவர்களுக்கு இன்னொரு சிறுபான்மை இனத்திற்கு அனுதாபம்

## மன்னாரில் ஆசிரியர் பற்றாக்குறை

மன்னார் மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு ஒக்டோபரில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதினால் மூடப்பட்ட பல பாடசாலைகள் தற்பொழுதும் மூடப்பட்ட நிலையில் மன்னார் தீவுப் பகுதியில் சில முஸ்லிம் பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

எனினும் இப்பாடசாலைகளில் கூட ஆசிரியர் பற்றாக் குறை நிலவி வருவதனால் முஸ்லிம் மாணவர்களின் கல்வி வெகுவாக பாதிப்படைந்துள்ளது.

மன்னார் நகரில் இயங்கும் பிரதான முஸ்லிம் பாடசாலையான அல் அஸ்ஹர்மகாவித்தியாலயத்தில் 5ம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் கடந்த ஆண்டு எவரும் சித்தியடையவில்லை.

இதற்குக் காரணம் ஆசிரியர் பற்றாக் குறையே என்று கூறப்படுகிறது.

முஸ்லிம் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியை தடுப்பதற்க்காக கல்வித் திணைக்களம் ஏதேனும் காத்திரமான நடவடிக்கை எடுக்குமா? என ஆவலுடன் மன்னார் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது திட்டமிடப்படாத மீள் குடியேற்ற நடவடிக்கையால் ஏற்பட்டிருக்க கலாமா?....என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.


padippakam
படிப்பகம்

padippakam



காட்ட முடியாமல் போனமை குறித்து ஆச்சரியப் படுவதற்கு எதுவுமில்லை. மேலும் அவர் தம்மை ஒரு சிறுபான்மை இனத்தவராகக் கருதிக் கொள்ளவுமில்லை. ஏனெனில் தமிழ் மக்கள் மத்தியில் உயர்சாதியினர் எனக் கருதப் பட்டவர்களும், நிலச்சுவாந்தர்களாக இருந்த வர்களும், சிங்கள மக்கள் மத்தியில் "வளவ்வ" என்ற சமூக அந்தஸ்தைப் பெற்றவர்களும் தான் பெரும்பான்மையினர் எனவும், கல்வியில் பின்தங்கியிருந்த முஸ்லிம்கள், கண்டிச்சிங்களவர், மலையகத்தமிழர், அடக்கியாளப்பட்ட பின்தங்கிய தமிழர்கள் எல்லோரும் சிறுபான்மையினர் எனவும் கருதியபடியாலும், அந்தஸ்தில் உயர்ந்த சிங்களவர்களும், தமிழ்களும் சமத்துவமான வர்கள் எனக் கருதியபடியாலும், தங்களது வர்க்க நலன்களை நீண்ட காலத்திற்கு நிலை நிறுத்திக் கொள்ள முடியும் என்னும் தூர நோக்கற்ற சிந்தனையும், தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து அவரால் சிந்திக்க முடியாமல் போனமைக்கான சில காரணங்களாகும். அவர் தூர நோக்கற்றவராயிருந்தால் வடக்கிலே சில கல்விக் கூடங்களை அவர் நிறுவியிருப்பாரா? என சிலர் எண்ணக் கூடும். இது குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஏனெனில் மிஷனரிக் கல்விக் கூடங்களைத் தவிர்த்துக் கொள்ள அநகாரிக தர்மபால போன்றவர்கள் பௌத்த கல்விக் கூடங்களை நிறுவியமை திரு.இராமநாதன் போன்றவர்களுக்கு முன்னு தாரணமாக அமைந்திருக்கக் கூடும். தேசிய காங்கிரஸை நிறுவி சிங்களத் தலைவர்களுக்கு தேசியவாத உணர்வுகளை தூண்டி விட்டவர்கள் யார்? சேர்.பொன்.அருணாசலம் போன்ற வர்களே. ஆனால் அவர் தமது வாழ்வின் பிற் பகுதியில் சிஷ்யர்கள் குருவை மிஞ்சி விட்டார்கள் என்பதையும், அண்ணரை தேரில் வைத்து வடம் இழுத்தவர்கள் தமக்கு காலைவாரி விட்டார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டார். இருந்தும் என்னபயன்? அனைத்தும் முடிந்த கதையாயிற்றே? **சிஷ்யர்களோ குருவை மறக்க வில்லை. கொழும்பிலே ஒரு சிலையை வைத்து, கழுத்திலே ஒரு மாலையைப் போட்டு விட்டார்கள். வருடத்தில் ஒரு நாள் மாலை அபிஷேகம். 364 நாட்களுக்கு காகத்தின் எச்சங்களால் அபிஷேகம் இவர்களின் புனித சேவைக்கு கிடைத்த கைமாறு இதுதான்.** ஆனால் துன்பியலே வாழ்வியலாகிப் போன இன்றைய தமிழ் மக்கள் தம்முடைய இன்றைய நிர்க்கதி நிலைக்கு இந்தக் கனவான்கள் விட்ட தவறும் ஒரு காரணம் என்பதை உணர்ந்து வருந்துகின்றனர். அது மாத்திரமின்றி **1915 கலவரம் தென்னிலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்குப் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தி விட்டது. இது அவர்களது மனதில் பாரிய வடுவை ஏற்படுத்தியது. எனவே இம்மக்கள் எதிர்காலத்தில் தேசிய மட்டத்தில்**



அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா. செயலாளரின் விசேட பிரதிநிதி ஒலரா ஓட்டுனு விடம், ஐ.நா. செயலாளர், கோபி அணணிடம் ஒப்படைப்பதற்காக வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பான மகஜரை வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் (NMRO) தலைவர் இன்ஜினியர் ஏ.எல். புர்ஹானுத்தீன் கையளிக்கின்றார்.

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

படிப்பகம்

padippakam



**தமிழ் மக்களோடு இணைந்து செயல்படமுடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியமைக்கு இத்தலை வர்களின் செயல்பாடு காரணமாய் அமைந்தமை ஒரு துக்ககரமான நிகழ்வாகும்.**

அடுத்ததாக எமது கவனத்தைப் பெறுவது பொன்னாவின் பொன்னான காலகட்டம். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல தமிழ் மக்கள் இன்னொரு சந்தர்ப்பத்தை திரு. ஜீ.ஜீ. பொன்னம் பலத்தின் காலத்தில் இழந்தனர். 1936ம் ஆண்டு இவர் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முன்வைத்தார். பிரிட்டிஷார் நாட்டைக் கைப் பற்றிய வேளையில் இலங்கையில் இரண்டு அரசுகள் இருந்தன என்பது உண்மை. இந்நிலைமையில் எம்மிடம் கைப்பற்றிய எமது அரசை திருப்பித்தா என அவர் கோரியிருந்தால் அது நியாயபூர்வமானதாக அமைந்திருக்கும். ஏனெனில் சமகாலத்தில் ஜனாப். ஜின்னா அவர்கள் இதே கோரிக்கையின் அடிப்படையில் போராடிக் கொண்டிருந்தார். ஆனால் அவ் வேளையில் தமிழ்த் தலைவர்கள் ஜின்னா அவர்கள் ஒரு முஸ்லிமானபடியால் அவரது கோரிக்கையை இனரீதியான கண்ணோட்டத்தில் விமர்சனம் செய்து கொண்டிருந்தபடியால் அவ்வாறானதோர் கோரிக்கையை முன்வைக்கத் தவறியதன் மூலம் தமக்கான இன்னொரு சந்தர்ப்பத்தை இழந்தனர். 80% சிங்களவர்கள் வாழ்ந்து வரும் இந்த நாட்டில் 50% எப்படிக் கொடுக்க முடியும் என்ற மனக் கிளர்ச்சியையும், அச்சத்தையும் கிளறி விட்டது. **தனிநாடு கோரிக்கை நாட்டின் ஒரு பகுதி சார்ந்த கோரிக்கை. ஆனால் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை முழு நாட்டினையும் தழுவியதாகும். எனவே இதே காரணத்தை வைத்து பிரிட்டிஷார் நிராகரிப் பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியது.** இறுதியில் கிடைத்தது 29ம் ஷரத்து மட்டுமேயாகும்.

1948இல் நாடு சுதந்திரம் அடைந்தது. ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை வெளியில் விட்டு வைப்பது ஆபத்து என்பதை டி.எஸ். சேன நாயக்க உணர்ந்தார். "தமிழன் என்று சொல்லடா. தலை நிமிர்ந்து நில்லடா", "இந்தியாவில் ஜின்னா. இலங்கையில் பொன்னா" என்ற கோஷங்களுடன் சேர். பொன். அருணாசலத்தின் மகனான யு.என்.பி. மகாதேவாவை ஜீ.ஜீ.பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தொகுதியில் தோற்கடித்து பாராளு மன்றத்தில் நுழைந்தார். டி.எஸ்.சேனநாயகா கையில் நல்ல மூக்கணாங் கயிறு ஒன்றிருந்தது. அதுதான் கைத்தொழில் அமைச்சர் பதவி. அவர் வீசிய கயிறு குறிதவறாது மாட்டிக் கொண்டது. யு.என்.பி.க்கு எதிராக கோஷமெழுப்பி வந்த ஜீ.ஜீ இப்போது யு.என்.பி.யின் அமைச்சர வையில் சேர்ந்து கொண்டார். 1948 ம் ஆண்டு இந்தியப் பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஜீ.ஜீ.அச்சட்ட மூலத்தை ஆதரித்தார். 1944ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்க் காங்கிரஸில் பிளவு தோன்றியது. இன்னொரு சிறுபான்மை இனத்திற்கு இரண்டாவது அடி வீழ்ந்தது. காடாய்க் கிடந்த மலையை தோட்ட மாக்கி, தமது இரத்தத்தையும் வியர்வையையும் உரமாக்கி வெளிநாட்டுச் செலாவணியை அள்ளிக் கொடுத்த இப்பாட்டாளி மக்களுக்குரிய வாக்குரி மையை பறித்து மாபெரும் துரோகத்தை யு.என்.பி. இச்சட்டம் மூலம் இழைத்தது. இச்சட்டத்திற்கு தமிழ் மக்கள் மத்தியில் இருந்த எட்டப்பர் கூட்டமும் துணை நின்றது. மலையக சிறுபான்மை இனத்திற்கு ஒரு தமிழ்த் தலைவரே துரோகம் இழைத்தார். இது வரலாற்றில் பதியப்பட்ட இரண்டாவது துரோக வரலாறு. யு.என்.பீ.கல்லோயா திட்டத் தின் மூலம் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சிறுபான்மை யினராக்கும் திட்டம் ஆரம்பித்து விட்டது. பிரஜாவுரிமையைப் பறிக்க ஒரு தமிழ்க் கட்சித் தலைவர் உறுதுணையாக இருந்த போதிலும் இம்முறை தூர நோக்குடைய ஒரு தலைவரும் இருந்தார். இனிமேல் ஏனைய இனங்கள் மீதும் தாக்குதல் ஆரம்பமாகப் போகிறது என்பதை உணர்ந்து கொண்ட இவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களாவர். எதிர் காலத்தில் தமிழ் மக்களை போராட்டத்திற்கு தயார்படுத்தக் கூடிய ஒரு தலைவராக இவரை வரலாறு இனங் காட்டியது. 1949ம் அண்டு தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. 1951ம் ஆண்டு 'எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க யு.என்பியை விட்டு விலகி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார். 1953ம் ஆண்டு ஹர்த்தால் இலங்கையின் அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. டட்லி சேனநாயக்க பதவி விலக சேர்.ஜோன் கொத்தலாவலை பிரதமராகினார். 1944ம் ஆண்டு நடைபெற்ற கட்சி மகாநாட்டின்



படிப்பகம்

padippakam



போது சிங்கள மொழியை அரசகரும மொழி யாக்குவது என்ற பிரேரணையை ஜே.ஆர். ஜயவர்தனா பிரேரித்தார். ஆனால் சேர். ஜோன் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது தமிழையும் அரசகரும மொழியாக்குவதாக கூறினார். ஆனால் கட்சிக்குள் இது குறித்து அதிருப்தி ஏற்பட்டது. இந்நிலையில் அவர் தீர்மானத்தை மாற்றிக் கொண்டார். இந்நிலையில் பண்டாரநாயக 1956ம் ஆண்டுத் தேர்தலில் தனிச் சிங்களத்தை 24 மணிநேரத்தில் சட்டமாக்குவதாக கூறி பதவிக்கு வந்தார். இம்முறை சமஷ்டி கட்சியிலும் அநேக பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். சமஷ்டிக் கட்சி மொழிப் போராட்டத்தை ஆரம்பித்தது. 1957ம் ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தம் உருவானது. எதிர் காலத்தில் நாட்டில் ஏற்படப் போகும் பாரிய பிரச்சினையை முன்னுணர்ந்த பண்டாரநாயக முளையிலேயே பிரச்சினையை தணித்து விட முயற்சி செய்ததன் விளைவே இவ் ஒப்பந்த மாகும். பிரதேச சபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதே இவ் ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். இவ் ஒப்பந்தம் குறித்து சமஷ்டிக் கட்சிக்குள் ஒரு சிலரிடையே அதிருப்தி இருந்த போதிலும், எதிர்வரும் காலங்களில் இவ் ஒப்பந் தத்தை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தை களின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என செல்வநாயகம் அவர்கள் விளக்கம் கொடுத்த பின்னர் அதிருப்தியாளர்கள் திருப்தி கொண்டனர். இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர்.ஜயவர்த்தனா பிக்குகளையும், பேரின வாதக் கருத்துக்களைக் கொண்ட ஒரு சிலரையும் இணைத்துக் கொண்டு கண்டிக்குப் பாத யாத்திரை செல்ல நடவடிக்கை மேற் கொண்டார். இப்பாத யாத்திரை கம்பஹா தொகுதியின் கண் அமைந்துள்ள "இம்புல்கொட" என்ற இடத்தை அண்மித்த போது அத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ்.டி.பண்டாரநாயக்க அவர்கள் யாத்திரையைத் தடுத்து நிறுத்தி, இனவாதிகளை கொழும்பை நோக்கி ஓட ஓட விரட்டினார். இவர் அக் காலத்தில் இளம் உறுப்பினராகவும், தீவிர சோசலிஷ சித்தாந்தங் களினால் ஈர்க்கப்பட்டிருந்த ஒருவர் என்பதுடன் **இந்த ஒப்பந்தத்தின் வெற்றிக்காக பாடுபட்ட வர்கள் சிங்களமக்கள் மத்தியிலும் இருந்தனர் என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.** மேலும் இலங்கைப் பிரஜா உரிமையை இந்திய வம்சாவளியினருக்கு மறுக்கும் மசோதா சமர்ப்பிக் கப்பட்ட போதும், பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் போதும் **சிங்கள இடதுசாரிகள் சிறுபான்மையினர் சார்பான நிலையினைக் கொண்டிருந்தனர் என்பதுடன், தமிழ் தலைவரான ஜீ.ஜீ. பொன்னம் பலம் அவர்கள் இதற்கு நேர்எதிரான நிலைப்பாட்டை தீவிரமாக மேற் கொண்டார் என்பதும் விசேடமாக கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.** திரு.எஸ்.டி. பண்டாரநாயக்க சிங்கள மக்களால் "இம்புல்கொட வீரயா" என விசேட அடைமொழியுடன் அழைக்கப்பட்டார். 1956ம் ஆண்டு அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்த டபிள்யு. தகநாயக்க அவர்கள் முஸ்லிம் சிறுபான்மையினர் கல்வித் துறையில் மிகவும் பின்தங்கியிருந்த காரணத்தால் முஸ்லிம் ஆசிரியர்களை நியமிக்கும் விடயத்தில் சில விசேடமான ஏற்பாடுகளை மேற்கொண்டார். பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு, யூ.என்.பி.யில் இருந்து விலகி வந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்ட வலதுசாரிகள், யூ.என்.பி. கட்சியினர், பிக்குகள், இனவாதிகள் ஆகியோரிடம் இருந்து மாத்திரமின்றி தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழர் தரப்பில் இருந்து எதிர்ப்பைக் காட்டியதனால் **இவ் ஒப்பந்தம் எல்லா இன மக்களினதும் எதிர்ப்புக்குரியது என்று ஒரு அபிப்பிராயத்தை தேசிய, விதேசிய மட்டத்தில் உருவாக்கியபடியால் பண்டாரநாயக்க மிகவும் இக்கட்டான நிலைக்குள்ளானார்.** எதிர்ப்பு பெரும்பான்மையினர் தரப்பில் இருந்தும் தமிழர் தரப்பில் இருந்தும் நாளுக்கு நாள் வலுவடைந்து நாட்டில் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத் தியது. பௌத்த பிக்குகள் பிரதமர் பண்டார நாயக்கவின் வீட்டின் முன்னே சத்தியாக்கிரகம் இருந்தனர். இந்நிலையில் ஒப்பந்தம் கிழித் தெறியப்பட்டது. 1956ம் ஆண்டில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது சமஷ்டிக் கட்சியினர் பாராளுமன்றத்தின் முன்னே காலிமுகத்திடலின் ஒரு பகுதியில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டனர். இச் சத்தியாக்கிரகம் சிங்களக் காடையர்களின் தாக்குதலுக்கு உட்பட்டது. அமிர் தலிங்கம் உட்பட பல தலைவர்கள் காயமுற்றனர். முன்னாள் பொத்துவில் பாராளுமன்ற உறுப்



படிப்பகம்

padippakam





வடக்கு முஸ்லிம்கள் அகதிகளாக வாழ்ந்து வரும் நொச்சியாகம அகதி முகாமின் இன்றைய தோற்றம்

பினர் எம்.எம். முஸ்தபா பாராளுமன்றத்தின் அருகில் அமைந்துள்ள பேரை ஆற்றுக்குள் தூக்கி வீசப்பட்டார். இந்நிகழ்வுகள் பண்டா செல்வா ஒப்பந்தத்தின் முன் இடம் பெற்றவையாகும். பிரதமர் பண்டாரநாயக்கவே பிக்குகளை அரசியலுக்குக் கொண்டு வந்தவர். இறுதியில் அவர்களே அவரை எதுவும் செய்யவிடாமல் நெருக்குதலுக்கு உட்படுத்தினர். பண்டா அவர்களினால் ஒப்பந்தம் கிழிக்கப்பட்ட பின்னர் சமஷ்டிக் கட்சியினர் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்தனர். 1958ம் அண்டு இனக் கலவரம் தோன்றியது. தமிழ் மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். வீடுகள், வர்த்தக ஸ்தலங்கள், கோயில்கள், சூறையாடப்பட்டன. உடைக்கப்பட்டன. தீயிடப்பட்டன. இவ்வாறான சம்பவங்கள் தெற்கில் ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்க வடக்கு கிழக்கிலும் வன்முறை வெடித்தது. தெற்கில் இருந்து தமிழர்கள் அகதிகளாகி கப்பலில் வடகிழக்கிற்கு அனுப்பப்பட்டனர். வடகிழக்கில் இருந்து சிங்களவர்கள் அகதிகளாகி தெற்கு நோக்கிச் சென்றனர். இக்கலவரத்தில் தமிழர்களுக்கு தமது வீடுகளையும், கடைகட்டிடங்களையும் வாடகைக்கு கொடுத்திருந்த முஸ்லிம்களின் சொத்துக்களும் அழிவுக்குட்பட்டன. தமிழர்களுடைய உருவ அமைப்பில் இருந்த சில முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். ஆகவே **இக்கலவரம் இரு இன மக்களை மட்டுமல்ல மூவின மக்களையும் பாதித்தது என்பதே உண்மையாகும்.** ஆனால் 1915 இன் இனக் கலவரத்தையும், 1958இன் இனக் கலைரத்தையும் ஒப்பீடு செய்து நோக்கும் போது, தமிழ் மக்கள் பார்வையாளராகவும், தமிழ் தலைவர்கள் ஹீரோக்களாகவும் இருந்தனர். முஸ்லிம்கள் இரண்டு சகோதர இனங்களினாலும் கைவிடப்பட்ட நிலையில் தனித்து விடப்பட்டனர். ஆனால் பயந்து ஓடவில்லை. "கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்" தருவதை வாங்கு, வாங்கியதைத் திருப்பிக் கொடு" "ஒரு கன்னத்தில் அடித்தால் அவனது மறுகன்னத்தில் கொடு" "மரணம் என்றோ ஒரு நாள் நிச்சயம்." மரணிக்கும் வரை போராடு" என்ற மாறுபட்ட தத்துவங்களோடு போராட வேண்டிய நிலையில் இருந்தனர். இறைவனைத் தவிர உதவிய செய்ய யாரும் இல்லை. குறுகிய நோக்கங்களோடு பிரிட்டிஷ் அரசு உதவி செய்ய முனைந்தது. ஆனால் முஸ்லிம்களோ தந்ததை வாங்கிக் கொண்டு கையில் அகப்பட்டதால் திருப்பிக் கொடுத்தார்கள். இதுவே 1915ம் ஆண்டுக் கலவரம் தந்த பாடம். 1958ம் அண்டு கலவரத்தின் போது தென் இலங்கையில் உள்ள சிங்கள மக்களும் முஸ்லிம்களும், வடகிழக்கில் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்ட தமது சகோதர இனத்தவர்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்து பாதுகாத்து அனுப்பிய சம்பவங்களும் உண்டு. ஆனால் 1983ம் ஆண்டு இனக் கலவரத் திற்கு பின்னரே "திருப்பிக் கொடுக்கும்" தத்துவத்தை தமிழ் மக்கள் 25 வருடங்களுக்குப் பின்னர் உணர்ந்தனர்.



படிப்பகம்

padippakam



முஹம்மது நபி, இயேசுகிறிஸ்து ஆகிய மதத்தலைவர்களும், மகாத்மாகாந்தி, செல்வ நாயகம் ஆகிய அரசியல் தலைவர்களும் தமது நோக்கத்தை எய்த அஹிம்சைப் பாதையையே வழி காட்டியாகக் கொண்டனர். எனினும் அவ்வாறானவர்களுக்கும் கூட சில சந்தர்ப்பங்கள் விதி விலக்காக அமைவது உண்டு. வன்முறையின் உச்சக் கட்டத்தில், வன்முறை தேடி வரும்போது வன்முறையை வன்முறையாலேயே எதிர்நோக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. இதற்குப் பின்வரும் இரண்டு உதாரணங்களை கவனத்திற் கொள்வோம். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இஸ்லாமிய எதிர்ப்பாளர்கள் கல் எறிந்தார்கள். குப்பைகளை வீசினார்கள். சூழ்ந்து கொண்டு அடித்தார்கள். காறி உமிழ்ந் தார்கள். பொறுமையுடன் சகித்துக் கொண்டார் கள். திருப்பி அடிக்கவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட விசுவாசிகள் மீது தாக்குதல் நடத்தினார்கள். கை கால்களைக் கட்டி வெயிலில் கிடத்தினார்கள். சவுக்கால் அடித்தார்கள். இரத்தக் காயங்களை உண்டு பண்ணினார்கள். சிலர் மரணத்தையும் தழுவி விட்டனர். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட விசுவாசிகள் திருப்பியடிக்கவில்லை. பொறுமையை கைக் கொண்டனர். பெருமானார் (ஸல்) திருப்பியடிக்கச் சொல்லவில்லை. ஆனால் தோழர்களின் நிலை கண்டு வருந்திய அவர்கள் மக்கா நகரை விட்டு வெளியேறுமாறு கூறினார்கள். பெருமானாரைக் கொல்ல இறுதி முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் விரோதிகள் வருமுன்னரே பெருமானார் மக்காவை விட்டும் வெளியேறி மதீனாவைச் சென்றடைந்தார்கள். இதன் பின்னரும் நாளுக்கு நாள் இஸ்லாம் வளருவதை சகிக்க முடியாத நிலையில் 700 இஸ்லாமிய எதிர்ப்பாளர்கள் பெருமானார் (ஸல்) அவர்களையும் தோழர் களையும் முற்றாக அழித்து விடுவது என்ற இறுதித் தீர்மானத்துடன் ஆயுத பாணிகளாக யுத்த ஆர்ப்பரிப்புடன் மதீனா நோக்கி வந்தனர். முற்றிலும் எதிர்பாராத நிலையில் யுத்தம் பற்றிய சிந்தனையற்றிருந்த ஒரு ஆத்மீக குழுவின் மீது யுத்தம் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட நிலையில் தற்காப்பு யுத்தம் ஒன்றை போதிய முன்னேற் பாடற்ற நிலையில் புரிய வேண்டியிருந்தது. முஸ்லிம்கள் சந்தித்த முதல் யுத்தம் அது. 313 தோழர்களுடன் பத்ரு யுத்த முனையைப் பெருமானார் எதிர் கொண்டார்கள். அன்று முஸ்லிம்கள் வெற்றியடையாது இருந்திருப்பின் இன்று இஸ்லாமியர் என ஓரினம் இருந்திருக்காது. இரண்டாவது உதாரணம்:- செல்வநாயகம் அவர்கள் 1956ஆம் ஆண்டில் இருந்து 1976ம் அண்டு வரை அகிம்சை வழியிலேயே போராடினார். 1956 ஜூன் மாதம், 1958ம் அண்டு இனக் கலவரம், 1961 சத்தியாக்கிரகம், 1974ம் அண்டு தமிழாராய்ச்சி மகாநாடு ஆகிய சந்தர்ப்பங்களில் வன்முறை பிரயோகிக்கப் பட்டது. பொறுமையுடன் சகித்தார். இறுதியில் 1976ம் ஆண்டு தனிநாட்டுத் தீர்மானம் நிறைவேற்றி 1977இல் தேர்தல் மூலமும், காங்கேசன்துறை தொகுதியில் பதவியை இராஜினாமா செய்து போட்டியிட்டதன் மூலமும் அங்கீகாரம் பெறப் பட்டது. ஆனால் சாத்வீக முறையில் தனிநாடு பெறமுடியாது என்பது இன்று யாவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மை. ஏனெனில் இதற்கான அண்மைக்கால உதாரணம்:- பங்களாதேசம். இதை செல்வநாயகம் அவர்களும் உணர்ந்திருந்தார். தனிநாட்டுத் தீர்மானத்தை அடுத்து வன்முறைக் கலாச்சாரம் ஒன்று உருவாகும் என அவர் ஊகிக்க இடமிருந்தது. அதாவது 1974ம் ஆண்டு தமிழாராய்ச்சி மகாநாட்டு வன்செயல் பொலீஸாரால் நிகழ்த் தப்பட்டு பல தமிழ் மக்கள் உயிரிழந்ததோடு, பல பெண்கள் பொலீஸாருக்குப் பயந்து நாலாதிக்கும் சிதறி ஓடிய போது துகிலுரிபட்ட நிலையில் வீட்டிற்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையில் மானத்தைக் காத்துக் கொள்ளும் நோக்கிலும், வெட்கத்திலும் யாழ் முற்றவெளி மைதானத்தின் அகழிக்குள் மறைந்து இருந்தனர். பின்னர் உறவினர் தேடி வந்த பின்னரே நடு நிசியில் ஊரடங்கிய பின் மிகவும் சங்கடத்துடனும், சங்கோஜத்துடனும் வீடு போய்ச் சேர்ந்தனர். முற்ற வெளி மைதானம் யுத்த களம் போல காட்சியளித்தது. பெண்கள், வயோதிபர், சிறுவர், சிறுமியர் அனைவரும் பொலீஸாரின் தாக்கு தலுக்குப் பயந்து சிதறி ஓடி ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்காகப் பிரிந்து சென்று மனோ ரீதியாக பாதிப்புற்று அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தனர். அன்றிரவு நிகழ்வுகள் அவர்கள் மரணிக்கும் வரையிலான நீங்காத நினைவுகளாக



படிப்பகம்

அமைந்து விட்டது. 1971ம் ஆண்டு தரப்படுத்தல் கொள்கையினால் கல்வியுரிமையை தாம் இழந்து விட்டதாகக் கருதி வெகுண்டெழுந்த இளைஞர்கள் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணியுடன் தொடர்பு கொண்டவர்களாக போராடி வந்தனர். அன்று 100% தரப்படுத்தல் அமுல்படுத்தப்பட்டது. ஜனநாயக ரீதியில் அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆனால் முற்றிலும் தமிழ் மக்களைக் கொண்ட மண்ணில் அதுவும் அனைத்துலகத் தமிழ்ப் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட, தமிழ் மொழி சார்ந்த சர்வதேச மகாநாடு ஒன்றில் நிகழ்ந்த அவலங்கள் இவ் இளைஞர்களை நிதானம் இழந்தவர்களாக மாற்றி தீவிரவாத செயற்பாடுகளுக்கு அவர்களை உட்படுத்தியது. இந்த மகாநாட்டை அரச ஆதரவில் கொழும்பில் நடாத்துவதன் மூலம் அரசாங்கம் தமிழ் மொழிக்குச் சேவை செய்கிறது என்ற அபிப்பிராயத்தை உருவாக்கித், தமிழ் மக்களின் மொழிப் போராட்டத்தை பலவீனப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இதற்கு இடமளிக்காத நிலையில் தான் தமிழ் மக்களின் தலை நகராகிய யாழ் நகரில் மகாநாடு நடாத்தப்பட்டது. இதனைக் குழப்பும் நோக்கிலேயே பொலீஸாரின் அன்றைய நடவடிக்கை அமைந்தது. இதன் பதிலடியாக 1975ஆம் அண்டு அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். **அரசியல் ரீதியாக அன்று தீர்க்கப்பட்ட முதல் வேட்டு தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அதிகாரங்கள் துப்பாக்கிக் குழாயில் இருந்தே பிறக்க முடியும் என்ற ஒரு நியதிக்கு வித்திட்டது.** அன்றில் இருந்து இன்று வரை பல லட்சம் வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட பின்னரும் இன்னும் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டேயிருக்கின்றன. அன்று துப்பாக்கி வேட்டு. இன்று பீரங்கி வேட்டு. 1975ஆம் ஆண்டு நிகழ்ந்த இச் சம்பவம், 1976ம் ஆண்டு தனிநாடு கோரிக்கை தீர்மானமாக மாறிய போது அரசியல் ஞானியும், தீர்க்கதரிசனம் மிக்க அரசியல் வாதியுமான செல்வநாயகம் அவர்களுக்கு இத்தீர்மானம் என்றோ ஒரு நாள் வன்முறைப் பாதையை நோக்கிச் செல்லும் என்ற அச்சத்தை உருவாக்கி இருக்க இடமுண்டு. 1977ம் ஆண்டு "ஆண்டவன் தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற

**புத்தளத்தில் அகதிகளின் வருகையால் பெரும்பான்மையினருக்கு பாதிப்பு**

தற்பொழுது புத்தளம் பகுதியில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகளைப் பாது காக்க பாதுகாப்பு அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வரும் சிறுபான்மை மக்களை புத்தளம் பகுதியில் குடியேற்றி அவர்களுக்கு வாக்குரிமைகளும் வழங்கப்பட்டுள்ளமை அப்பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பெரும்பான்மை மக்களுக்குபெரும் அச்சுறுத்தலையும், அசௌகரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் இடம் பெயர்ந்து வந்துள்ள பலர் நகர்ப்பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளமையினால் பெரும்பான்மை இனத்தவர்களின் உரிமைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

-ஸ்ரீமணி அத்துலத் முதலி எம்.பி.

வேண்டும்" என்று அவரது வாயில் இருந்து வந்த வார்த்தை "இதுகாலவரை என்னால் மேற்கொள்ளப்பட்ட சாத்வீக மார்க்கம் முடிவுற்று விட்டது" என்ற அர்த்தத்தில் தொனித்ததாக இருக்கலாம். அத்துடன் தமிழ் மக்களை தமிழ் தலைவர்களோ, இளைஞர்களோ, அரசாங்கமோ காப்பாற்ற முடியாது என்ற அர்த்தம் கொண்டதாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும் அரவது சீவிய காலத்திலேயே வன்முறையின் அடையாளத்தைக் கண்டு கொண்டார் என்பதே உண்மையாகும். யுத்தம் முடியப் போவதுமில்லை. தீர்வு இப்போதைக்கு ஏற்படப் போவதுமில்லை என இன்றைய நிலையை அடிப்படையாகக் கொண்டு நாம் கூறும் போது, அவ்வாறாயின் **எப்போது தீர்வு வரும்? என்ற கேள்வி பிறக்கும். அதற்கான விடை என்றோ ஒரு நாள் தீர்வு வரும். அதுவும் தெய்வச் செயலால் திடுதிப்பென ஒருநாள் தீர்வு வரும். இதுவே சரியான விடை.** செல்வநாயகம் அவர்களது சொல்லும் இந்த விடையையே சுட்டி நிற்கிறது எனலாம். நாம் விட்ட இடத்துக்கு மீண்டும் வருவோம். 1959ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் திகதி பிரதமர் பண்டாரநாயக்க சோமராம தேரோ என்ற பிக்குவினால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரே பிக்குமாருக்கு அரசியலில் முக்கியத்துவம் கொடுத்தார். இறுதியில் அவர்களே அவரைப் பலியெடுத்தனர். வைத்தியசாலைக்கு பண்டார



padippakam
படிப்பகம்

padippakam



நாயக்க அவர்களைப் பார்வையிடச் சென்ற முன்னாள் பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவல பிக்குகள் முன்னிலையிலேயே "நான் இந்த ..... களைக் கட்டிப் போட்டேன். அவர் அவிழ்த்து விட்டார். அதுவே அவரைக் கடித்து விட்டது" என்று சொன்னார். எந்தளவுக்கு அர்த்தமுள்ள வார்த்தைகள்! பண்டார நாயக்கவின் அரசியல் எழுச்சி தனியாக ஆராயப்பட வேண்டிய விடயம். ஏனெனில் அவரது கொள்கைகளும் நடவடிக்கை களும் இந்த நாட்டின் அரசியல், சமூக பொருளா தாரத் துறைகளில் 1956ம் அண்டில் இருந்து 1977 வரை இரண்டு தசாப்தங்களாக சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டி ருந்தது என்பதனாலேயாகும். 1961ம் ஆண்டு சமஷ்டிக் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகம் நாளடைவில் முஸ்லிம்கள் உட்பட எல்லாத் தரப்பினரதும் ஆதரவைப் பெற்றுக் கொண்ட போதிலும் இராணுவ முனையில் ஒடுக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டில் இருந்து 1964ஆம் அண்டு வரையிலான ஸ்ரீமாவோ பண்டாரநாயக அரசாங்க காலத்தில் இடம் பெற்ற இன்னுமொரு முக்கிய நிகழ்வு பாடசாலை கள் தேசிய மயமாக்கப்பட்டமை. இந் நிகழ்வினால் கத்தோலிக்க மிஷனரிகளின் பரிபாலனத்திற்கு உட்பட்டிருந்த பல கல்வி நிலையங்கள் பாதிக்கப் பட்டன. இதனால் கத்தோலிக்க சிறுபான்மை யினரின் அதிருப்தியை அரசாங்கம் சம்பாதித்துக் கொண்டது. 1966ம் அண்டு தமிழ் மொழி விசேட சட்டம் டட்லி-செல்வா ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டு வரப்பட்டது. இதனை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரும், சமசமாஜ கம்யூனிஸ்ட், இடது சாரிகளும் எதிர்த்தனர். மொழிப் பிரச்சினை ஆரம்பமான காலத்தில் இருந்து சிங்கள-தமிழ் மொழிகளுக்கு சம அந்தஸ்துக் கோரி வந்த இடதுசாரிகள் 1956ஆம் ஆண்டு தனிச் சிங்கள மசோதா பாராளு மன்றத்தில் விவாதிககப்பட்ட போது "இரு மொழி ஒரு நாடு ஒரு மொழி இரு நாடுகள்" என்று வாதிட்ட கொல்வின் ஆர் டி சில்வா போன்ற இடது சாரிகள் 1965-1970 கால கட்டத்தில் 'தோசை மசாலவடை' என்று மேடைகளில் பச்சை இனவாதம் பேசினர். 1936 ஆம் ஆண்டில் இருந்து பாராளுமன்றப் பாதையை நிராகரித்து, சோசலிஷப் பாதையில் தொழிலாளர் விவசாய-பாட்டாளி மக்களின் புரட்சி ஒன்றுக் கூடாகவே பொருளாதார வளமுள்ள ஐக்கிய இலங்கையையும், சிறுபான்மையினருக்கான நீதியையும் சமத்து வத்தையும் நிலை நாட்ட முடியுமென நிலையான கொள்கையொன்றுடன் 28 வருடங்களாக கோஷித்து வந்த இடதுசாரிகள் 1964ஆம் ஆண்டு அக் கொள்கைகளைக் கைவிட்டு ஸ்ரீமாவோ வுடன் கூட்டுச் சேர்ந்ததுடன் மந்திரிப் பதவிகளையும் பெற்றுக் கொண்டனர். இவ் விடயம் இங்கு குறிப்பிடப்படுவதன் காரணம் **இனப் பிரச்சினையில் சிறுபான்மையினர் மீது அனுதாபம் கொண்டிருந்த கணிசமானளவு சிங்கள மக்களின் ஆதரவினைப் பெற்றிருந்த நட்புறவு சக்தியொன்று இழக்கப்பட்டது** என்பதனை சுட்டிக் காட்டவேயாகும். இவர்கள் ஏன் இவ்வாறு தடம் புரண்டார்கள் என ஆராய்வோமாயின் ஒரு காரணம் அரசியல் வங்குரோத்துத் தனம். இரண்டாவது காரணம் தமது இறுதிக் காலத்திலாவது மந்திரிகளாக இருந்து விடுவோம் என்ற ஆவல். மூன்றாவது காரணம் **தமிழ் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் வலது சாரி சார்புடையவர்களாக இருந்ததன் காரணத்தால் ஏற்பட்ட விரக்தி மனோபாவமாகும்.** திரு.திருச்செல்வம் அவர்கள் சமஷ்டிக் கட்சியின் சார்பாக மந்திரி சபையில் அங்கம் வகித்தார். 1966ஆம் ஆண்டு தமிழ் மொழி விசேட மசோதாவுக்கு எதிராக ஊர்வல மொன்று நடாத்தப்பட்ட போது கொள்ளுப்பிட்டிச் சந்தியில் பொலீஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இந்த ஊர்வலம் அலரி மாளிகையை நெருங்கிய போது ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது. திரு. ரோஹண விஜேவீரவும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்க விடயம். டட்லி - செல்வா ஒப்பந்தம் பூரணமாக நிறைவேற்றப்படாத நிலையில் 4 வருடங்களுக்குப் பின்னர் திருமலை கோணேஸ்வர ஆலயத்தை புனிதப் பிரதேசமாக்கும் பிரச்சினையைச் சாட்டாக வைத்து திருச் செல்வம் தேர்தல் நெருங்கும் சமயம் பார்த்து தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார். ஒரு அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றை செயற்படுத்துமா? என்பதை அனுமானித்துக் கொள்ள அதன் ஆரம்ப



படிப்பகம்

padippakam



அரைவாசிப் பதவிக் காலமே போதுமான ஒன்றாகும். எனவே பெரும்பான்மைப் பலமற்ற ஒரு அரசாங்கத்திற்கு நான்கு வருட காலத்திற்கு முட்டுக் கொடுத்து விட்டு விலகுவது அர்த்தமற்ற செயல். மந்திரிப் பதவி ஆசை யாரைத்தான் விட்டது? ஒப்பந்தம் மீறப்பட்டமை மூன்றாவது தடவையாகும். சேர்.பொன். அருணாசலம் அவர்களின் காலத்தில் சிங்களத் தலைவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒரு கனவான் ஒப்பந்தமும் செயலிலந்து போனது. இதுவே முதலாவது ஒப்பந்த மீறலாகும். 1972ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டது. இடதுசாரித் தலைவரான கொல்வின் ஆர்.டி. சில்வாவே இதன் கர்த்தா ஆவர். ஏற்கனவே அரசியலமைப்பில் இடம் பெற்றிருந்த சிறு பான்மையினனருக்கென உள்ளடக்கப்பட்டிருந்த 29ம் ஷரத்து நீக்கப்பட்டது. அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுமிடத்து உச்ச நீதி மன்றத்தின் ஊடாக தமது உரிமையை மீளப்பெற்றுக் கொடுக்கும் ஏற்படும் ஏற்பாடுகள் எதுவுமிருக்க வில்லை. சமஷ்டிக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் முற்றாக நிராகரிக்கப் பட்டன. எனவே இவ் அரசியலமைப்பின் மூலம் சிறுபான்மையினர் முற்றாகவே உதாசீனம் செய்யப்பட்டனர். பௌத்த மதம் அரச மதமாக்கப்பட்டது. 1977 இல் யூ.என்.பி 5/6 பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்தது. வடக்கு கிழக்கில் சமஷ்டிக் கட்சி பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்று எதிர்க்கட்சித் தலைவராக திரு. அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். 1978ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டது. இப்போதும் அரசியலமைப்புக் கூடாக தமது உரிமையினை நிலை நாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பத்தை சிறுபான்மையினர் இழந்தனர். 1977ம் ஆண்டு யு.என்.பி. பதவிக்கு வந்த சூட்டோடு சூடாக இனக் கலவரம் இடம் பெற்றது.

## யுத்தம் எவ்வாறு தோன்றியது? அதன் விளைவுகள்

பின்னர் 1983ம் ஆண்டு இனக் கலவரம் இடம் பெற்றது. இந்த இனக் கலவரமே இலங்கைக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்திக் கொடுத்தது. அத்துடன் இந்த நாட்டின் இனப் பிரச்சினை புதியதோர் வடிவத்தினைப் பெற்றுக் கொண்டது. திரு.அமிர்தலிங்கம் தமது பதவியை ஆதாரமாக வைத்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை இலங்கையின் இனப்பிரச்சினையின் பால் திருப்ப முயற்சி செய்தார். 1982ம் ஆண்டு ஜே.ஆர். சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக மீண்டும் தம்மை ஜனாதிபதியாக்கிக் கொண்டார். இந்தியா இலங்கைக்கு விரோதமான நிலைப் பாட்டை எடுத்துக் கொண்டது. இயக்கங்கள் பல தோன்றி இராணுவ ரீதியாக வளர்ச்சி பெற்றன. அமிர்தலிங்கம் அவர்களும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவி இழந்தனர். அநுரா பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவரானார். ஒரு தமிழர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடாது என்ற உணர்வு மேலோங்கியிருந்தது. 1972ம் ஆண்டு அரசியலமைப்புக்கு தியாகராஜா, திரு.அருளம்பலம், குமாரசூரியர் போன்ற தமிழர்கள் ஆதரவாக வாக்களித்தனர் என்பதையும், 1977க்குப் பின்னரான காலகட்டத்தில் திரு. இராஜதுரை கட்சி மாறி அமைச்சராகப் பதவியேற்றார் என்ற வரலாற்றுத் தகவல்களையும் மனதில் கொள்ளுதல் வேண்டும்.

லலித் அத்துலத் முதலி பந்தோபஸ்து அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர் கிளர்ச்சி வடிவத்தில் இருந்த இளைஞர்களின் செயல் பாடுகள் யுத்த நிலைக்கு வளர்ச்சியடைந்தன. இலங்கை அரசாங்கமும், இயக்கங்களும் நவீன ஆயுதங்களைக் குவிப்பதில் ஈடுபட்டன. இலங்கை ஒரு முழுமையான யுத்த சூழ்நிலைக்குள் சிக்கிக் கொண்டது. இந்திரா காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி பதவியேற்றார். இவர் பதவியேற்ற பின்னர் இந்தியாவின் நிலைப் பாடுகளில் மாற்றம் ஏற்பட்டது. திம்புப் பேச்சு வார்த்தை 1985 இல் இடம் பெற்றது. இயக்கங் களினால் நான்கு அம்ச கோரிக்கை முன் வைக்கப்பட்டது. **செல்வநாயகம் அவர்கள் சமஷ்டி கோரிய காலத்தில் முஸ்லிம்களின் உரிமையை கௌரவித்ததுடன் முஸ்லிம்கள் விரும்பும் பட்சத்தில் தமக்காக ஒரு அலகைப் பெற்றுக் கொள்வதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என தெட்டத் தெளிவாகக் கூறினார். 'தமிழ் பேசும் மக்களின் தாயகம்' என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தார். ஆனால் திம்புப் பேச்சு**



படிப்பகம்

padippakam



வார்த்தையில் முஸ்லிம்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். **'தமிழ் மக்களின் தாயகம் மட்டுமே' என்ற ரீதியிலேயே பேச்சுவார்த்தை நடந்தது.** இதுவும் இறுதியில் தோல்வியுற்றது. எனவே முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படும் நிலையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் உருவாகியது. **ஜே.ஆர்.ஆட்சிக் காலத்தில் கூடிய சர்வ கட்சி மகாநாட்டில் முஸ்லிம்கள் பிரதிநிதித்துவம் பெற்றனர். ஆனால் திம்புவில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் நிலையை விளக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.** இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்திய இராணுவம் இலங்கை வந்தது. இலங்கைக் கடற் படையினால் கைது செய்யப் பட்ட விடுதலைப் புலித் தலைவர்களை விடுவிக்கும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் சூழ்ச்சிகரமாக நடந்து கொண்டது. இந்திய இராணுவத்திடம் தமிழ் இயக்கங்கள் அனைத்தும் தமது ஆயுதங்களை ஒப்படைத்திருந்தன. அனால் இலங்கை அரசாங்கம் தந்திரோபாயமாக செயல்பட்டு விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையில் யுத்தத்தை உருவாக்கியது. 1988 மாகாண சபைத் தேர்தலில் விடுதலைப் புலிகள் தவிர ஏனைய இயக்கங்கள், முஸ்லிம் காங்கிரஸ் என்பன போட்டியிட்டன. திரு. பிரேமதாச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இந்திய இராணுவத்தை வெளியேற்றிய பின்னரே இம் மாகாண சபை விடுதலைப் புலிகளுடனான பேச்ச வார்த்தையினைத் தொடர்ந்து கலைக்கப்பட்டது. இந்திய இராணுவம் வெளியேறும் போது முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாள் தனிநாட்டைப் பிரகடனம் செய்த பின்னர் இந்திய இராணுவத்துடன் இந்தியா சென்று விட்டார்.

## வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டமையும், அவற்றிற்காக கூறப்பட்ட காரணங்களும்

1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தை முறிவடைந்து யுத்தம் ஆரம்பமாகியது. 1990 ஒக்டோபர் 30 இல் வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இதற்கு அவ்வப்போது பல காரணங்கள் தமிழ்ப் பொதுமக்கள் தரப்பினால் சொல்லப்பட்டதாயினும் தெளிவான காரணம் விடுதலைப் புலிகளினால் வெளிப்படுத்தப்படவில்லை. **தாம் ஏன் வெளியேற்றப்பட்டோம் என்ற கேள்விக்கு இன்றுவரை முஸ்லிம்கள் விடை தெரியாதவர்களாகவே இருக்கின்றனர்.** முஸ்லிம்களிடம் ஆயுதங்கள் இருந்ததாக சிலர் காரணம் சொன்னார்கள். இது உண்மைக்குப் புறம்பான ஒரு கூற்றாகும். தமிழ் இயக்கங்களிடம் மிகப் பெருவாரியான ஆயுதங்கள் இருந்தன. இந்த இயக்கங்கள் அனைத்தையும் செயல் இழக்கச் செய்ததுடன் ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர். அவ்வாறாயின் இவர்களது குடும்பத்தவரையும் சொத்துக்களைப் பறிமுதல் செய்து கொண்டு அவர்களை வடக்கு கிழக்கை விட்டு வெளியேற்றினார்களா? இல்லை. எனவே இக்காரணம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. கிழக்கில் புலிகளுக்கும் முஸ்லிம்கள் சிலருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளே காரணம் எனக் கூறினார்கள். 1958இல் வடக்கு கிழக்கில் நிகழ்ந்த சில சம்பவங்களுக்காகவும், 1983ம் ஆண்டு திரு நெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்காகவும் தென்னிலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இனக் கலவரம் நியாயமற்றது என்று கூறுபவர்கள் கிழக்கில் இடம் பெறும் சம்பவம் தொடர்பாகவே வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர் எனக் கூறுவது நியாயமற்றதொரு கூற்றாகும். மேலும் இக் காரணமும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. ஆறுமாத பச்சிளம் பாலகனின் காதில் இருந்த சிறு தோட்டைக் கூட குறடு கொண்டு வெட்டியெடுத்தார்கள். முஸ்லிம்களை வெளியேற்ற தீர்மானித்தவர்கள் அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்யத் தீர்மானித்தது ஏன்? பெரும்பான்மையினர் தெற்கில் தமிழ் மக்களின் சொத்துக்களை சூறையாடியது அநீதி என்று கூறுபவர்கள், வடக்கில் தம்மை விட சிறுபான்மையினருக்கு அநீதி இழைத்தது ஏன்? முஸ்லிம் காங்கிரஸ் காரணமாகவே வெளியேற்றப்பட்டதாக சிலர் காரணம் சொல்கிறார்கள். முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடுகள் எமக்கும் ஏற்புடையனவல்ல. சேவை செய்வதில் பிரதேச ரீதியான ஏற்றத் தாழ்வுகள், தம்மை ஆதரிக்காத முஸ்லிம்களை



படிப்பகம்

padippakam



அரசியற் பழிவாங்குதல், வாக்குகள் அதிகமாக உள்ள முஸ்லிம் பிரதேசங்களை குறிவைத்து செயற்படுதல் என்பன எமக்கும் உடன்பாடானவையல்ல. ஆனால் முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம் குறித்து ஆராய்தல் வேண்டும். இந்நாட்டில் வாழுகின்ற 12% ஆன தமிழ் மக்களுக்கு 1948ம் ஆண்டு ஒரு தமிழ் கட்சியும் 1949ம் ஆண்டு இரண்டு தமிழ் கட்சிகளும் இன்று பல தமிழ் கட்சிகளும் இயங்குவது நியாயமாயின், மலையத் தமிழர்கள் 5.5% வீதத்தினராக இருக்கும் நிலையில் பலகட்சிகள் அவர்களுக்காக இயங்க முடியுமாயின் 8% ஆன முஸ்லிம் மக்களுக்காக முஸ்லிம் அரசியல் கட்சிகள் இயங்குவது இனவாதம் என்று கூறுவது எவ்வகையில் நியாயபூர்வமாகும்? எனவே முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமல்ல ஏனைய முஸ்லிம் கட்சிகளும் இயங்குவது நியாயமானதே. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர். இதில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் உரிமைகள் குறித்து ஏற்றுக் கொண்டுள்ளனர். **1988ம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலை புலிகள் பகிஷ்கரித்தனர். முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் புலிகளுடனான சிநேகபூர்வ உறவை கௌரவிக்கும் முகமாக மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரித்தனர்.** பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. குறித்தும் டட்லி-செல்வா ஒப்பந்தம் செயல்படுத்தப்படாதது குறித்தும் குரல் கொடுப்பவர்கள் புலிகள் முஸ்லிம்களின் உரிமைகள் சம்பந்தமாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தை காலில் போட்டு மிதித்தமைக்கு என்ன காரணம் கூறப் போகின்றார்கள்? எனவே முஸ்லிம்களின் சொத்துக்களைப் பறித்துக் கொண்டு வடக்கிலிருந்து விரட்டியமைக்கு விடுதலைப்புலிகளோ அல்லது அவர்கள் சார்பாகப் பேசுபவர்களோ எந்தவித நியாயமும் கூற முடியுமா? **வட மாகாண முஸ்லிம்களாகிய நாங்கள் பெருமையுடன் தலை நிமிர்ந்தவர்களாகக் கூறுகிறோம். எங்களுக்கு இந்த நாட்டில் வாழுகின்ற எந்த இன மக்களும் எதிரிகளல்ல. மிகவும் அவமதிக்கப்பட்ட நிலையில் வெளியேற்றப்பட்ட நிலையிலும் மனிதர்கள் என்ற ரீதியில் ஆத்திர உணர்வுகளுக்கு உட்பட்டிருந்த நிலையிலும் எமது சின்ன விரல்கூட தென்னிலங்கையில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக அசையவில்லை என்பதையும், பிராந்திய மட்டத்திலும் சரி, தேசிய மட்டத்திலும் சரி நாம் வாழுகின்ற பிரதேசங்களில் உள்ள மக்களுடன் மிக அந்நியோன்யமாகவும், அன்பாகவும் வாழ்ந்து வரும் ஒரு இனம் என்பதையும் வரலாற்று ரீதியாக நிரூபித்திருக்கிறோம் என்பதையும் ஒவ்வொரு தமிழ் மகனும் மனதில் ஆழமாகப் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.** எமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து இன்றும் தமிழ் மக்கள் வருந்துகிறார்கள் என்பதை நாம் உணர்கிறோம். என்றோ ஒரு நாள் தமிழ் மக்களுடன் மீண்டும் இணைந்து வாழ்வோம் என்ற நம்பிக்கை எமது இறுதி மூச்சு உடலில் இருந்து அடங்கும் வரை இருந்து கொண்டே இருக்கும். விடுதலை புலிகள் தமது வருத்தத்தை பெருந்தன்மையுடன் வெளிப்படுத்தியிருப்பதையும் தமது தவறுகளை ஏற்றுக் கொண்டுள்ளமையும் எமது மனதில் ஆழமாகப் பதிந்து உள்ளது.

## வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம்

துரதிஷ்டவசமான ஒரு சூழ்நிலையில் எமது தாயகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு 7 வருடங்களை நிறைவு செய்து 8வது வருடத்தில் உள்ளோம். நாம் வாழ்ந்த பூமியை பார்க்க ஆவல் கொண்டவர்களாயுள்ளோம். புத்தளத்தின் குறுக்கு வீதிகளைக் காணும் போது நாவாந்துறை, கரையூரும், கலேவலையைப் பார்க்கும் போது வேலணை மண் கும்பானையும், பெரிய முல்லையில் நடமாடும் போது யாழ் சோனக தெருவும் நம் நினைவில் நிழலாடுகின்றன. இதே போல மன்னார், முல்லைத்தீவு, நாச்சிக்குடா மக்களும் **தமது பிரதேசத்தை ஒத்த சூழல்களைக் காணும்போது தாம் வாழ்ந்த பிரதேச நினைவுகளால் ஈர்க்கப்படுகின்றனர். இதுதான் மண்வாசனை.**

நாம் தென்னிலங்கை வந்த ஆரம்ப காலங்களில் தொழிற் பிரச்சினை, பிள்ளைகளின் கல்விப் பிரச்சினை, வசிப்பிடம் சார்ந்த வசதியீனங்கள், பழக்கப்படாத சூழலும் சீதோஷ்ண நிலை, கையில் பணமற்ற நிலை, நோயும் மனோரீதியான பாதிப்பும், அடையாள அட்டை, சிங்கள மொழிப் பிரச்சனை, பிறப்பு சாட்சிப்



படிப்பகம்

padippakam



பத்திரம், மரண அத்தாட்சிப் பத்திரம் என்பன இல்லாத நிலை, ஒழுங்காக நிவாரணம் வழுங்கப் படாத நிலை என பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தோம். ஆனால் இன்று இவ்வாறான நிலையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீட்சி பெற்று வருகின்றோம். நாம் வாழும் தற்போதைய பிரதேச மக்களுடன் உறவுகளை வலுப்படுத்திக் கொண்டவர்களாயுள்ளோம். இந்நிலையை நாம் உடனடியாகச் சீரழித்து விடமுடியுமா? எம் முன் உள்ள பிரதானமான கேள்வி இதுவாகும். நிச்சயமாக யாரும் இதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். யுத்தமானது பல்வேறு முகங்களையும் வடிவங்களையும் கொண்டதாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக இந்தப் போர் இப்போது முடியப் போவதில்லை. தீர்வுகளும் சமாதானமும் எட்டாக் கனிகளாகவே தோன்றுகின்றன. இரு தரப்பினரும் சர்வதேச சமூகத்திற்கு சமாதானப் பிரியர்களாக காட்டிக் கொள்வதில் யார் கெட்டிக்காரர்கள் என்ற ரீதியில் இன்னொரு இராஜ தந்திரப் போரும் நடைபெறுகிறது. **உண்மையிலேயே இரு தரப்பினரும் போரையே விரும்புகின்றனர் என்பதும், மூன்று இன மக்களும் சமாதானத்திற்காக பிரார்த்திக்கிறார்கள் என்பதுமே உண்மை.** இரு தரப்பினரும் நன்றாக அடிபட்டுக் களைத்து பின்னர் சமாதானத்தின் தேவை குறித்து விருப்பப்படும் வரை இது ஒரு நீண்ட கால யுத்தமே. பூச்சி புழுக்களோடு செய்யப்படும் எந்தச் சமாதானமும் நிலையானதல்ல. விடுதலை புலிகளற்ற சமாதானம் அர்த்தமற்றது. **புலிகள் ஈழம் காணப் போவதும் இல்லை. அரசும் இராணுவமும் நிம்மதியாக வாழப் போவதுமில்லை.** எனவே எங்களது எதிர்காலம் அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டு அந்தோ கதியாகி விடக் கூடாது. எனவே எங்களுக்கு இப்போது தேவைப்படுவது இடைக் காலத் தீர்வு. பிறந்த பூமியில் ஒரு காலையும் வரவேற்ற பூமியில் ஒரு காலையும் வைக்க வேண்டிய வேண்டியவர்களாயுள்ளோம். புலிகள் போகச் சொன்னாலும் சரி, இயக்கங்கள் வரச் சொன்னாலும் சரி, அரசு போகச் சொன்னாலும் சரி எந்த அகதியும் மீளக் குடியேறத் தயாரில்லை. ஏனெனில் அவனவன் பட்டது அவனவனுக்கே தெரியும். ஆகவே தனது பாதுகாப்பில் தானே திருப்திப்படும் வரை பிடரியில் பிடித்துத் தள்ளினாலும் போக மாட்டான். எனவே பெண்கள் பிள்ளைகள், வயோதிபர்கள், நோயாளர்கள் என்பவர்களை தற்போதைய இருப்பில் உறுதிப்படுத்திக் கொண்டு ஆண்கள் போகலாம். வரலாம். வர்த்தகம் செய்ய சாதகமான சூழ்நிலைகள் இருந்தால் பாரிய முதலீடுகளின்றி வர்த்தகம் செய்யலாம். நேர்மையுள்ள வர்த்தகர்கள் கிடைக்கும் பட்சத்தில் நம்மை பொருட்களை விநியோகிக்கும் பங்காளராகவும், அவர்களை விற்பனைப் பங்காளராகவும் கொண்டு வர்த்தகம் செய்யலாம். நாம் வடக்கில் நிரந்தர வாசிகளாக இருந்த வேளையில் கண்டி, மட்டக்களப்பு, கொழும்பு மற்றும் தென்னிலங்கைப் பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள் எவ்வாறு வர்த்தகம் செய்து விட்டு திரும்பினார்களோ அவ்வாறே நாமும் செயல்பட வேண்டியவர்களாயுள்ளோம். எமது வீடுகளில் எமக்கு விருப்பமானவர்களைச் சட்டரீதியாக எம்மைப் பாதிக்காத ஒரு ஒழுங்கின் கீழ் குடியமர்த்தி வீட்டின் ஒரு பகுதியில் நாமும் தங்கிக் கொள்ளலாம். தற்போது அங்கு வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் நிலை நமக்கு ஒரு பாடம். அங்கு அடிக்க இங்கு ஓடுகிறார்கள். இங்கு அடிக்க அங்கு ஓடுகிறார்கள். எனவே யாழ்ப்பாண முஸ்லிம்களும், முல்லைத்தீவு முஸ்லிம்களும் மிக ஆழமாகச் சிந்தித்து செயல்பட வேண்டும். ஏனெனில் அவர்களது குடிப்பரம்பல் சிக்கலான ஒரு பூகோள ரீதியாக அமைந்துள்ளது. எனவே தற்போதைய நிலையில் எமது எதிர்காலம் குறித்த திட்டமிடுதல் இவையே.

எமது அரசியல் எதிர் காலம் குறித்து சில விடயங்கள் குறிப்பிட விரும்பினாலும் தற்போதைய சூழ்நிலையில் அவை அவசியமற்றவையாக இருப்பதால், அவை குறித்த விடயத்தைத் தவிர்த்துக் கொள்கிறேன். கிழக்கிலும் பாதை திறந்தாலும் தற்போது என்ன நிலை? கொஞ்சம் கொஞ்சமாக பிரதேசங்களின் அரச கட்டுப்பாடு நழுவிச் செல்கிறது. எனவே **வடக்கின் பாதை திறப்பும் நமக்கோர் எச்சரிக்கை எனக் கூறி இக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.**

☆ ☆ ☆



படிப்பகம்

# விடியலை நோக்கி

அகதி இதழ் 11 ஜூன் 1997 ல் நடாத்திய கட்டுரை, கவிதைப் போட்டியில்
1ம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கவிதை
அபிசாலிகு மீரா முகைத்தீன் (மூதூர் முகைதீன்)

ஓர் அஸ்த்தமனத்தின் முடிவில்
அநாதரவாக்கப்பட்ட
பூமித் தாயை
கபளீகரம் செய்த காரிருளாய்
ஒரு விடியலுக்குள்.........
எம்,
இனிய உறவுகளை
குழி தோண்டிப் புதைத்து விட்டு
இன்பங்களை கொள்ளையடித்து
மனித நேயங்களை
மரிக்கச் செய்த
அந்த.......
இருண்ட நாட்களில்
நாம்,
அகதிகளாக அந்தஸ்த்துப் பெற்றோம்.

♦ ♦ ♦ ♦

கண்களைக் கட்டி
காட்டிலே விட்ட கதையாய்
எங்கள் எதிர்காலமும்
எங்கும் இருண்டு கிடக்க
விடியலை நோக்கிய பயணம்
இன்னும்
முடியாமல் தொடர்கிறது........

♦ ♦ ♦ ♦

நீண்ட அமாவாசைக்குள்
அகப்பட்டு,
நிலவைக் காணாத நிலமாய்
நெஞ்சிலே ............
சோக முட்டைகளைச் சுமந்து
நெளியும் புழுக்களாய்
நகரத் தெருக்களிலே
வழியும் எம் இனம்
இதோ,
நட்சத்திர ஒளியையே
நம்பிக்கைச் சுடராய் ஏற்று
தொலைந்து போன முகவரிகளைத் தேடி
முடமான கால்களுடன்
முயற்சியைத் தொடர்கிறது.

♦ ♦ ♦ ♦

பெருமையையே
சிறுமையாய் எண்ணி
பூவுலகில்,
ஏகத்துவம் ஒன்றையே
ஏற்றமென நம்பி
மறுமை ஒன்றிலேயே
புதுமையைக் காணப்
புறப்பட்ட ஓர் இனம்
இன்று,
வறுமையையே
பொறுமையாய் ஏற்கும்
கொடுமையினைக் கண்டோ.......
கொதிக்கும் கதிரோனும்
இவர்கள் வாழ்வில்
உதிக்க மறுத்ததால்
விடியலை நோக்கிய பயணம்
இன்னும்
முடியாமல் தொடர்கிறது.

♦ ♦ ♦ ♦

அகதி முத்திரை ஒட்டி
தெருவோரத்தில் படுத்துறங்கும்



padippakam
படிப்பகம்

padippakam



ஒரு தலை முறையாய்
இன்றைய
இளைய பரம்பரை...
கல்விக் கரையில்
அறிவு மீனுக்காய்
காத்திருக்க வேண்டிய
மாணவ கொக்குகள்கரங்களிலே
கலயத்தை ஏந்தி
வீதிக்கரையிலே தவமிருந்து
...ற்ற காலத்தை
விரயமாக்குகையில்
நாங்கள்,
அவர்களுக்கு
ஆதரவு கொடுப்பதை மறந்து
ஆதிப் பெருமைகளையே
அளந்து கொட்டுவதில்
காலத்தைக் கடத்துகின்றோம்.

♦ ♦ ♦ ♦

எம் நம்பிக்கை வானில்
அமைதிப் புறாக்கள்
அடிக்கடி பறக்கும் போது
நாமும்,
சுகமான கற்பனைகளைச் சுமந்து
சுதந்திர தென்றலைச்
சுவாசிக்கும் மகிழ்ச்சியில்
தீர்வுக் கதவைத் திறக்கையில்
அந்தோ............
சிறகொடிந்து நிற்கும்
வெண்புறாக்களின் முடிவு
எங்கள் கற்பனைகளை
கானல் நீராய் மாற்ற
விடிவு.......... எங்கோ..........
முடிவில்லாத தூரத்தில்
தெரியும் புள்ளியாய்
விலகிச் செல்லும்.

♦ ♦ ♦ ♦

பெற்ற தாயையும்
பிறந்த மண்ணையும்
உயிராகக் கருதுவது
நீங்கள் மட்டுமல்ல......
நாங்கள் ஓங்கி ஒலிக்கும்
சத்திய தத்துவமே
அதில்தான் அத்திவாரமிட்டுள்ளது.
அதை,
உங்கள் உள்ளங்கள் உணர்ந்திருந்தால்
உலகத்தில் இந்த அவலங்கள்
அரங்கேறியிருக்காது.
விழியிழந்த குருடர்களாய்
விடியலை நோக்கி..........
நாங்கள்,
ஒளிதேடி அலையும்
இழிநிலையும் இருக்காது.

♦ ♦ ♦ ♦

தூங்கும் எம் இனத்தினை
தாங்கும் தலைவர்கள் என
தம்பட்டமடிப்பவர்கள்
வாக்கு வேட்டைக்கு
எங்களைப் பாவிக்க........
நாம் இன்று
மலிவுப் பொருளாக
மாறிப் போனோம்.
அரசியல் சந்தையில்
எங்களை வியாபாரமாக்கி
ஆதாயம் தேடுபவர்களுக்காகவாவது
அகதிகள் இனம்
இன்னும்
அதிகம் பெருக வேண்டும்.

♦ ♦ ♦ ♦

ஆறேழு ஆண்டுகளாய்
அல்லல்பட்ட நேரத்தில்
அகதிகள் அமைப்பு
எம் இருண்ட வானில்
ஒரு அகல் விளக்காய் தோன்ற
அதையே
ஒளிவிளக்காய்ப் பிடித்து
பாதியிரவையும் தாண்டியிராத
பயணத்தில்
மீதித்தூரத்தையும் கடக்க.....
இடையே
தீர்வுத் திட்டங்கள்



படிப்பகம்

padippakam



திசை காட்டுகையில்
விமர்சனக் கணைகள்
அதை
தாமதம் செய்ய
இனவாத ஈட்டிகளோ
எம்,
விடிவுச் சூரியனைத்
துரத்திச் செல்லும்.

♦ ♦ ♦ ♦

வீடுகளை இழந்ததால் மட்டும்
வீதிக்கு வந்தவர்கள் அல்ல நாங்கள்......
ஒரு அந்திப் பொழுதுக்குள்
ஆடு மாடுகளைப் போல்
அடித்துத் துரத்தப்பட்டவர்கள்.......
அதனால்
கூடுகளை இழந்த
குருவிக் கூட்டங்களாய்
இன்று,
நாடெங்கும் அலையும்
நாடோடிகளாய் ஆனவர்கள்.

♦ ♦ ♦ ♦

சுதந்திரக் காற்று
சுதந்திரமாக வீசும் ஒரு நாளில்
தீயினால் வெந்த.....
எம்,
பிறந்த மண்ணுக்கு
திரும்பிப் போகும்வரை
விடியலை நோக்கி..........
எங்கள்
உரிமைச் சேவல்களும்
உரத்துக் கூவும்.
அதுவரை
விடிவை நோக்கிய
பயணம்
முடியாமல் தொடரும்..........

♦ ♦ ♦ ♦

*****

## மிகப் பெரிய அநியாயம்

### வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புளொட்டின் தலைவருமாகிய த.சித்தார்த்தன்

வட புலத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து அதாவது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமை மிகவும் வேதனைக்குரியது. அவ்வாறான ஒரு செயற்பாட்டை புலிகள் செய்தது மிகப் பெரிய அநியாயம் என்பதே எமது கருத்து. அம் மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் அவர்களது தாயகம் என்பதில் எந்த வித கருத்து வேறுபாடுகளுமில்லை. மீண்டும் அவர்கள் சொந்த இடங்களிலேயே குடியேற்றப்பட வேண்டுமென்பதில் எந்தவித மாறுபட்ட கருத்துக்கும் இடமில்லை என்றே கருதுகின்றேன்.

29-9-92 பக்கம் 6, நேர்காணல்,
நன்றி - தினகரன்.

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

படிப்பகம்

padippakam



# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதிர்ச்சியில் வடக்கு முஸ்லிம்களின் நிலை

**முகுசீன் றயீசுத்தீன்**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமானது, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியற் பலத்தின் காரணமாக அல்லது இலங்கை வாழ் முஸ்லிம்களின் அரசியற் தேவையொன்றினால் உருவாகியது. எனவே முஸ்லிம்கள் அதிகம் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்ட தேசிய ரீதியாக இலங்கை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய கட்சியொன்றாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் கலந்தது.

1989 இல் பாராளுமன்றப் பிரவேசத்தையும் பெற்றுக் கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) வடக்கு முஸ்லிம்களிடத்தும் ஒரு பாராளுமன்றப் பிரதி நிதியைப் பெற்று, அந்த முஸ்லிம்களின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது. இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், 1994 இல் நடந்த பொதுத் தேர்தலில் இரு முஸ்லிம் பிரதிநிதிகள் வடக்கிலுள்ள தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இதன் மூலம் காங்கிரஸின் பாராளுமன்ற அரசியற் செல்வாக்கிற்கு வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் காரணமாக இருந்து வந்திருப்பதனை அறியக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில்காங்கிரஸிற்கும் வடக்கு முஸ்லிம்களுக்கும் இடையே அண்மைக் காலங்களாக ஏற்பட்டு வரும் சில விரும்பத் தகாத பலஹீனமான தொடர்புகள் அல்லது தோற்றப்பாடுகள் வேறு பல புதிய அம்சங்களை வெளிக்காட்டி நிற்கின்றன. முரண்பாடுகளைத் தோற்றுவித்திருக்கின்றன. அவ்வாறிருந்தும் காங்கிரஸிற்கும் வடக்கு முஸ்லிம்களுக்கும் இடையே உறவுகள் எப்போதும் பலமாகவே இருந்து வருகின்றன எனும் தோரணையிலான விளக்கங்களை காங்கிரசும் அதனைச் சேர்ந்தவர்களும் முன் வைப்பது அரசியலில் சகஜமாகக் காணப்படுகின்றது.

அவ்வாறெனில், காங்கிரஸின் பற்றுதல் மீதான வடக்கு முஸ்லிம்களின் அண்மைக் கால வீழ்ச்சிக்கும் அவர்களின் ஆரம்ப அரசியல் எழுச்சிக்கும் காரணங்கள் என்ன? அக்காரணங்களை காங்கிரஸ் அறியுமா? காங்கிரஸ் அவற்றை அறிவு பூர்வமாக உணர்வதை விடுத்து, அதனது கொள்கைகளுக்கோ அரசியல் அபிலாஷைகளுக்கோ ஒரு போதும் வடக்கு முஸ்லிம்கள் எதிரானவர்கள் அல்லர் என்பதை நிராகரிக்கும் சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ளத் தேவையில்லை என்ற அம்சங்கள் விளக்கப்பட வேண்டியவைகளாகும்.

காங்கிரஸின் அரசியல் நிலைப்பாட்டில் இரு விடயங்களை வடக்கு முஸ்லிம்கள் புரிந்து கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். அவை.

i. ஏன் வடக்கு முஸ்லிம்களின் எதிர்பார்ப்பையும், அபிலாஷைகளையும் அவர்களது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் காங்கிரஸின் உயர் பீடத்திற் புரிய வைக்க வில்லை?

ii. அல்லது வடக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளை காங்கிரஸின் உயர்மட்டம் அறிந்திருந்தும் அவர்களை



படிப்பகம்

padippakam



மாற்றாந்தாய் மனப்பான்மையாக நடாத்துவதற்கான காரணமென்ன?

வடக்கு முஸ்லிம்களின் காங்கிரஸ் மீதான அபிமான வீழ்ச்சிக்குப் பல காரணிகள் காணப்படுகின்றன. அவற்றில், அம் முஸ்லிம்களது பிரதிநிதிகளின் வடக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாத- கொள்ள முயற்சிக்காத மனப் போக்குகளும் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். வடக்கு முஸ்லிம்களோடு இருதய பூர்வமான தொடர்பற்று இருக்கும் தனது பிரதிநிதிகளை காங்கிரஸ் கண்டு அனுபவம் கொண்டுள்ளதோ என்னவோ, வடக்கு முஸ்லிம்கள் இதுபற்றிக் கவனித்தே வந்துள்ளனர்.

காங்கிரஸை முழுமையாக நோக்கும் போது கூட, சிறிய சக்தியாக இவர்கள் இருந்த போது வடக்கு முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுத்தவர்கள், இன்றைய அரசியலில் பாரிய சக்தியாக மாறிய போது மட்டும் வாய்மூடி மௌனியாக இருப்பதன் புதிர் வடக்கு முஸ்லிம்களுக்குப் புரியவில்லை.

வடக்கு முஸ்லிம்களைப் பற்றிய பேச்சுக்கள் காங்கிரஸ் வட்டாரங்களில் பலமாக அல்லது பலமொன்றாக பல்வேறு மட்டங்களிலும் பேசப்படுகிறது. இவர்களைக் காட்டியும் காங்கிரஸின் அரசியல் ஓரளவு நடாத்தப்படுவதை மறுக்க முடியாது. இவர்களைத் தங்கள் அரசியற் சக்தியாகக் காட்டிக் கொள்வதிலும் காங்கிரஸ் சாதனை படைத்துள்ளது. அதற்கொப்பவே வடக்கு முஸ்லிம்களும் காங்கிரஸின் நடவடிக்கைகளுக்குத் தங்களால் இயன்ற பலத்தைக் கொடுத்து வந்துள்ளனர்.

ஆனால் வடக்கு முஸ்லிம்கள் இவ்வளவு காலமும் காங்கிரஸுக்குக் கொடுத்து வந்து முழுநிறைவான ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் மதித்துள்ளதா? அதற்கொப்ப வடக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளை காங்கிரஸ் நிறைவேற்றிக் கொடுத்துள்ளதா? போன்ற வினாக்கள் அகதிகளாக வாழும் அம்முஸ்லிம்களால் கேட்கப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

மாறாக, காங்கிரஸ் மீதோ அதன் பிரதிநிதிகள் மீதோ வேறேதும் தப்பபிப்பிராயங்கள் கிடையாதென்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, குற்றச் சாட்டுகளையும் குறைபாடுகளையும் அரசியலில் வழமையாகிவிட்ட வார்த்தை ஜாலங்கள் மூலமோ, தர்க்க ரீதியான - கவர்ச்சிகரமான சிந்தனைக் கருத்துகள் மூலமோ சிதறடிக்க முனைவது அவ்வளவு அறிவுபூர்வமானதல்ல.

1990 ஒக்டோபரில் வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் போக்கே காரணம் என காங்கிரஸின் எதிர்த் தரப்பு அரசியல் வாதிகள் அழுத்தந்திருத்தமாக அப்போது கூறித் திரிந்த போது, அதனைக் காங்கிரஸ் மறுத்ததோ இல்லையோ, வடக்கு முஸ்லிம்கள் அக்கருத்தை நிராகரித்தனர். அதன் மூலம் அப்போது உருவாகி வந்த முஸ்லிம் தலைமைத்துவ முனைப்பை முறியடிக்க முனைந்த சக்திகள் ஏமாற்றங் கண்டன.

வடக்கு முஸ்லிம்கள் அகதிகளாக வெளியேறுமுன்னர் இருந்த பற்றுதலை விட காங்கிரஸ் மீது பன்மடங்கு பற்றுதலையும் போற்றுதலையும் 1990 ஒக்டோபரின் பின் இம்முஸ்லிம்கள் கொண்டிருந்தனர். சுருங்கக் கூறின், அகதியாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்கள், தம் விடிவுக்கென முழுமையாக காங்கிரஸையே நம்பியிருந்தனர்.

வடக்கு முஸ்லிம்கள் அகதியான பின் அவர்களின் நிலை பற்றியும் அந்நிலைக்கான விடிவு பற்றியும் அவ்வேளை காங்கிரஸைப் பலப்படுத்த, வேண்டிய அவசியம் பற்றியும் காங்கிரஸின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் பேசவும் வடக்கு முஸ்லிம்களின் ஆதரவைத் தம் பக்கம் பலமாகப் பற்றிக் கொள்ளவும் ஏற்ற சூழ்நிலை அக்காலகட்டத்தில் பொருத்தமானதாகவும் தேவையானதாகவும் அமைந்தது.



படிப்பகம்

padippakam



எனவே முஸ்லிம் காங்கிரஸ் பாதையில் வடக்கு முஸ்லிம்களின்அரசியற் பயணம், பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் விடிவு தேடியதாக அமைந்திருந்தது. ஆனால், ஆண்டுகள் ஏழும் கடந்தோடி விட்ட நிலையில் விடிவைத்தான் காணோம்.

காங்கிரஸின் முதிர்ச்சியின் முனைவில் வடக்கு முஸ்லிம்கள் அடைந்த வெற்றிகள் என்ன? பெற்ற நன்மைகள் தான் என்ன? அவர்களது அரசியல் சமூக பொரளாதார உரிமைகளில் ஏதேனும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதா? போன்ற வினாக்கள் இன்று விவாதிக்கப்படுகின்றன.

கொள்கைகள், கோட்பாடுகள் என்பன நிலை மாற மாற, புது வடிவமெடுக்கப் படுவதாலோ என்னவோ வடக்கு முஸ்லிம் களின் வாழ்வில் வடிவில்லாது போனது?! வடக்கு முஸ்லிம்களின் அகதி வாழ்க்கையின் நீண்ட தொடரிற்தான் காங்கிரஸின் அரசியல் வெற்றி தங்கியிருக்கிறது போலும்! சில வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப் பதன் மூலம் இந்த முஸ்லிம்களைத் தம் விடிவு பற்றிப் பேசவிடாது வாய் மூட வைக்கும் முயற்சிகள் அரங்கேறுகின்றன போலும்!

விடிவு கிடைக்கும் வரை வசதியாக வாழலாமே என்ற முயற்சியே அதுவெனில், விடிவுக்காக எடுக்கப்பட்ட (உருப்படியான) நடிவடிக்கைகள் என்ன? எடுக்கப்படும் நடவடிக்கைகள் விடிவைக் கொண்டு வரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதா? அவற்றிற்கு வடக்கு முஸ்லிம்களின் அபிப்பிராயம் பெறப்பட்டுள்ளதா?

பதவிக்கு வரும் வரை எங்கள் குரலை தங்கள் குரலாகவும் பதவிக்கு வந்த பின்னர் தங்கள் குரலை எங்கள் குரலாகவும் ஒலிக்கும் பிரதிநிதிகளின் சந்தர்ப்பவாத முடி வொன்றும் வடக்கு முஸ்லிம்களின் முடிவாக மாட்டாது.

அகதிகளாக வாழும் பகுதிகளிலேயே இடம் பெறும் மீள் குடியேற்றமும் மின்சார வசதியும் 'அகதி' எனும் வார்த்தையையும் புறக்கணிப்பினையும் அகற்றி எறிந்து விடாது. தொழிற் துறையும் வேலைவாய்ப்பும் கல்வி நடவடிக்கைகளும் அர்த்தமுள்ளதாக ஆகி விடாது. அகதி வாழ்க்கை ஓட்டத்தில் தான் அவற்றை உணர்ந்து கொள்ளலாமே தவிர, வெறும் வாய்ப் பேச்சுகளால் உணரவே முடியாது.

எனவேதான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு முஸ்லிம்களின் அர்த்த முள்ள உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கத் தவறி விட்டதாகவும் அவர்களது அரசியல் - சமூக - பொருளாதார உரிமைகளை தரங்குறைந்த அமைப்பில் வைத்திருக்க முனைவதாகவும் விமர்சிக்கப்படுகிறது.

இந்நிலையில் உருவாகி வரும் வடக்கு முஸ்லிம்களின் அரசியல் ரீதியான எழுச்சியை காங்கிரஸ் அடக்க முயற்சிப்பதாகவும் கருத் துக்களையும் விமர்சனங்களையும் ஏற்றுக் கொள்ளாத வகையில் வடக்கு முஸ்லிம் களையும் உள்ளிழுத்த பிடிவாத அரசியலை காங்கிரஸ் நடாத்துவதாகவும் பலமான குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

பிரதேசத்திற்கேற்ப அரசியல் நடவடிக் கைகள் வித்தியாசமானது. முஸ்லிம்கள் இந்நாட்டில் ஓரினமாக இருந்தாலும் அவர்கள் பிரிந்து வாழும் சூழல் அவர்களிடையே வித்தியாசமான அரசியலுணர்வுகளைக் கொண்டிருப்பதைத் தவிர்க்க முடியாது. அந்த வகையில் தென்பகுதி முஸ்லிம்கள் எப்போதும் சிங்களவர்களோடு அண்டி வாழ்ந்து பழக்கப் பட்டவர்கள். அவ்வாறே வடக்கு முஸ்லிம் களினதும் கிழக்கு முஸ்லிம்களினதும் அரசியற் சூழல் வித்தியாசமானது. இந்நிலையில், காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்ட அரசியற் சிந்தனைகளை வடக்கு முஸ்லிம்கள் விடயத்திலும் திணிப்பது பொருத்தமற்ற ஒன்றாகும்.



படிப்பகம்

padippakam



காங்கிரஸ் முன் வைத்திருக்கும் தென் கிழக்குக் கோஷத்துடனான, வடகிழக்கின் பெரும்பான்மை முஸ்லிம் பிரதேசங்களின் இணைப்பு விடயமானது புவிசார் அரசியலில் சாத்தியப்படத்தக்க ஒன்றெனக் கூற முடியாது. அத்துடன் நவீன அரசியலில் விரைந்து நடைமுறைப்படுத்தக் கூடிய கோரிக்கையாகவும் இல்லை. மேலும் இனப்பிரச்சினைக்கான தீர்வை தூரத்தே ஒதுக்கி வைக்கும் அம்சமாகவும் சர்ச்சையான தீர்மானங்களினால் தான் அரசியலில் பிழைப்பு நடத்த முடியும் என்ற கோணத்திலும் மேற்படி இணைப்பு விடயத்தைக் கருத முடிகிறது.

சாத்தியப்பட அரிதான-வடக்கு கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களின் இணைப்பிலான காங்கிரஸின் 'தென் கிழக்கு வடிவம்', நாளையே சாத்தியப்படத்தக்க வெறும் 'தென் கிழக்குப் பகுதியாக மாற்றமுறின், அரசியல் ரீதியான தம் பங்களிப்பையும் தமக்கேற்ற அரசியல் தேவையையும் வடக்கு முஸ்லிம்கள் அப்போதிருந்தா சிந்திக்க வேண்டும்? என்ற வினா இங்கே எழுகிறது.

ஆனால் வடக்கு முஸ்லிம்களின் சிந்தனை எல்லாம், ஏன் எங்கள் நிலையை முஸ்லிம் காங்கிரஸ் புரிந்து கொள்ளவில்லை? எங்களுக்கும் ஏற்றதொரு அரசியலை ஏன் முஸ்லிம் காங்கிரஸால் நடாத்த முடியாதுள்ளது? என்பதுதான்.

வடக்கு முஸ்லிம்களின் அரசியல் ரீதியான அண்மைக் கால எழுச்சியை ஏன் தங்கள் உயர்ச்சிக்கென காங்கிரஸ் பயன்படுத்திக் கொள்ளத் தவறியது? அவர்களது சூழலுக்கேற்ற சிந்தனையை ஏன் காங்கிரஸால் புரிந்து கொள்ள முடியாது போனது? அவற்றிற்குக் காரணமென்ன? சர்வாதிகாரமா? பிரதேச வாதமா? தெளிவை நோக்கிய பாதையில் அகதிகளாக - அகதி முகாம்களில் அலைக்கழியும் - அல்லலுறும் வடக்கு முஸ்லிம்கள்!

## தனிநபரது ஒரு ரூபா உழைப்பில் 25 சதம் யுத்தத்துக்கு செலவாகிறது

வடக்கு – கிழக்கு யுத்தத்தினால் நாடு இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வரத் தயங்குகிறார்கள். வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் கூட இங்கு வரத் தயக்கம் கொள்கிறார்கள்.

இந்நாட்டில் நடக்கும் பயங்கர யுத்தத்தின் மூலம் யுத்தச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணமேயுள்ளது. ஒரு தனி நபரின் ஒரு ரூபா உழைப்பில் அல்லது வருமானத்தில் 25 சதம் இந்நாட்டின் யுத்தத்திற்காகச் செலவு செய்யப்படுகின்றது.

பேராசிரியர்
—அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



படிப்பகம்

# சமாதானமே விரைந்து வா!

செ. குணரத்தினம்

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் புலிகளினால் வெளியேற்றப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவடைந்ததையிட்டு வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினால் நடாத்தப்பட்ட மரபு கவிதைப் போட்டியில் 1ம் இடத்தை பெற்றுக் கொண்ட கவிதை

*"மரணமே! விரைந்துவந்து மாய்த்திடு எம்மை!" யென்ற*
*குரல்களின் சத்தம் கேட்கக் கொஞ்ச நாள் தானே யுண்டு!*
*அதற்குமுன் எனது நெஞ்சில் ஆசையொன்றெழுந்து வந்து*
*எதனையோ கேட்டுக் கேட்டு எந்தனை வதைக்குதம்மா!*

*ஆசைதான்! அதிலே எந்தப் பேராசை உணர்வுமில்லை!*
*பாசந்தான்! அதிலும் கூடப் பரிவுதான்! வேறொன்றில்லை!*
*நாசமாய்ப் போன வாழ்வும், நலிந்தோரின் உறவும், அன்னார்*
*நேசித்த மண்ணும், நெஞ்சில் நில்லாது ஓடிச் சென்ற*
*நிம்மதிச் சிரிப்பும், வாழ்வின் நிரந்தரச் சுகமும், இந்த*
*கும்மிருள் சூழ்ந்த நாட்டில் குருத்து விட்டெறிந்து மீண்டும்*
*பூத்திட, சண்டை ஓய்ந்து, புதியதோர் தலைமுறைக்கு*
*காத்தவர் உயிராம் தங்கள் கலாசாரம் கலை பண்பாட்டை*
*சேர்த்தொன்றாய்க் கொடுப்பதற்குச் சமாதானம் வராதா! என்ற*
*சோர்விலா ஆசை நெஞ்சைச் சதா போட்டு அரிக்குதம்மா!*

*கல்லாக இருந்த போதும் காடாகிக் கிடந்த போதும்*
*முள்ளாகத் தெரிந்த போதும் முந்நூறு நாட்கள் ஆங்கே*
*கருவறை தனில் சுமந்து, கற்கண்டாய்ப் பெற்றெடுத்து,*
*உருவாக்கி, நடைபழக்கி, ஓடிநாம் உலவ விட்ட*
*அன்னைக்குச் சமமாம் எம்மை அவள் பெற்றுப் போட்ட பூமி*
*என்றைக்கும் இதுவே எங்கள் இதயமும் ஆகுமென்றால்*
*பொய்யென்று யாருமிங்கே புகலவே மாட்டார் உண்மை!*
*ஐய்யோ அந்த மண்ணை அணைத்திடத் துடிக்கும் மக்கள்*
*கையேந்தி எங்கோ வாழும் கவலையை என்னவென்பேன்!*
*"மை போட்டால் சமாதானத்தை மந்தியே வந்து காட்டும்!"*
*என்பதா? இல்லையில்லை! இதயங்கள் மாறாவிட்டால்*
*என்றுமே இந்த மண்ணில் இனிக்கின்ற சமாதானத்தை*
*தந்திட யாருமில்லை! தரித்திர வாழ்வே மிஞ்சும்!*
*வந்திடு இறையே! இங்கே வாழ்கின்ற மனிதர் நெஞ்சில்*
*அப்பிய இருளைப் போக்கி, அன்புடன் சமாதானத்தை*
*இப்புவி உய்வதற்கு என்றுமே நிலைக்கச் செய்க!*



padippakam
படிப்பகம்

padippakam



இருந்த நிலம் துரத்திவரும்! இடிமிடித்துத் தலையில் விழும்!
வருத்தவரும் காலமோர் நான்! வாழ்வு கெட்டுக் குழம்பி விடும்!
வடக்கை விட்டு அலறியோடி வாழ்வதற்கே வக்கில்லாமல்
கிடப்பதற்கு நிலமைவரும்! கீர்த்தியுடன் வாழ்ந்த வாழ்வு
அகதியென்ற வாழ்வென்றாகும்! அனைவருமே சிதறியோடி
வகைதெரியா தலைத்து வாழும் வரண்டநிலை சூழுமென்று
அறிந்தவரா இவரெல்லாம்? அல்லாவின் நாமமொன்றே
அறிந்தவராய் வாழ்ந்தவர்க்கு அநியாயம் வந்ததென்ன?

ஒன்றாயிரண்டா? ஓரேழு ஆண்டுகளாய்
மன்றாடி இப்புவியில் மடிப்பிச்சை கேட்பவர் போல்
வேண்டிச் சமாதானம் விலாபுடைக்கத் தொழுகின்றார்!
ஆண்டவா சமாதானத்தேன் அள்ளியவர் உண்பாரா?

வங்காள விரிகுடாவில் வாய்பிளந்து வந்த புயல்
எங்கும் தலை சுற்றி எக்காளம் இட்டதோர் நாள்!
'பங்கருக்குள் ஒளிந்தவர் போல் புகையிரதப் பெட்டியுள்ளே
பொங்கியெழும் துயர் பயத்தைப் பொத்திப் பிடித்த படி
குந்தியிருந்தோம்! குழறினோம்; மட்டுநகர்
வந்திறங்கி வீடுசெல்ல மனங்கொண்ட தொழிலாளர்
யாவருமே அதற்குள்ளே மாடுகளாய்த் தானிருந்தோம்!
'வாழையூர் அமைந்த நல்ல காகித ஆலை தன்னில்
வேலை செய்யும் நாங்களன்று வேலை விட்டு வந்திருந்தோம்!
காலையிலேயே கருத்தரித்த கடும்காற்று மாலையிலே
சூறாவழியாகிச் சுழல்கிறது என்ன செய்வோம்?
பாறாங்கல் கூடப் பறக்கிறது வானெழுந்து!

புகைவண்டி ஓடிவந்து பாதுகாப்பாய் நிற்கிறது?
திகைக்கின்றோம் எல்லோரும் திசையொன்றும் தெரியவில்லை?
புகையிரத நிலையத்தில் புறாக்களைப் போல் தங்கவைத்து
அடைக்கின்றார் கதவுகளை அன்பான ஸ்டேசன் மாஸ்டர்!

"என்னை விடுங்கள்!" எனச் சொல்லி நான் வெளியே
கண்ணைத் திறந்து, கடல் மார்க்கம் நீண்டு செல்லும்
பாதையைப் பார்த்தபடி பயத்தோடு வருகின்றேன்"
"போதையா இவனுக்" கென்று புறுபுறுத்தார் சிலபேர்கள்"
பட்டணத்து வீடுகளில் பாதுகாப்பாய்ப் பள்ளிகளில்
வட்டக்கலரி போட்டு வளைத்திருப்பார் மனைவி மக்கள்
என்ற துணிச்சலிவர் இதயத்தில் இருந்திருக்கும்"
எந்நிலமை அப்படியா? என்கிராமம் தூரத்தில்
வங்கக் கடலோரம் வளைந்து செல்லும் ஆற்றோரம்
பொங்கியெழும் கடல் பார்த்துப் பூரித்துப் போயிருக்கும்!
மூன்றுமைல் தொலைவு! மூச்சைப் பிடித்தபடி
ஊன்றியடித்து ஓலமிட்டுப் பாய்ந்து விழும்
கடல் பரப்பைப் பார்த்தபடி காற்றாக ஓடுகிறேன்!
உடல் நனைந்து எனக்குள்ளே உதிரமும் விறைக்கிறது!



படிப்பகம்

padippakam



ஓலை யென்றும் ஓடென்றும் ஒடிந்து விழும் மரமென்றும்
பாதையெல்லாம்..... காலிடறப் பதைபதைக்க ஓடுகிறேன்.
புயலை எதிர்கொண்டு புயலாக ஓடுகிறேன்.
பயமெனக்கு அப்போது பருப்பளவும் வரவில்லை!

புகையிரத நிலையத்தில் பாதுகாப்பாய்த் தோழருடன்
வகையாக நானிருந்து வந்திருக்கலாம் காலை!"
விடவில்லை என்னை மனம் வேகமாய்ப் போபோ என்று
விடை தந்ததல்லாமல் வேறுபயம் ஊட்ட வில்லை!

பத்துமாதம் சுமந்து பெற்ற பத்தினியாள் என்தாயார்!
"அத்தா"னென்றே யழைக்கும் அன்புடைய எனதில்லாள்,
புத்திரர்கள், புத்திரிகள் பிறப்பெடுத்த என்பூமி
இத்தனையும் இல்லாமல் எப்படி நான் வாழுவது?

செத்தாலும் சாவேனென் செந்நிலத்தை, உறவுகளை
எத்தாலும் பிரியேன்! யார் எதிர்த்தாலும் பணியேன்! இந்த

உள்ளுணர்வே வடபுலத்தில் உண்டு களித்திருந்து
அள்ளுண்டு இனப்புயலில் அகப்பட்டுத் தென்னிலங்கை
வந்தவரின் நெஞ்சினையும் வாட்டி வதைக்கிறது!
எந்த மனிதனுக்கும் இரக்க குணம், நீதியன்பு
என்று இருந்தால்தான் இவ்வுலகம் மீட்சிபெறும்!
என்றுதான் சமாதானம் இப்புவியில் காட்சி தரும்?
"எங்குள்ளார் கடவு" ளென இன்றும் தான் கேட்கின்ற
புங்கம், புளியடியைப் பிடித்திருக்கும் பேய் பசாசாய்
நமக்குள்ளே நாஸ்திகரும் நாட்டிடையே வாழ்வது போல்
எமக்குள்ளே சமாதானம் இருப்பதனைப் புரியாமல்
"எங்கேசமாதானம்? எவர்தருவார்?" என்று தினம்
அங்கிங்கெனாதபடி ஆவலுடன் எங்கும்தான்
கேட்கின்றார், ஐயய்யோ கேடுகெட்ட மானிடர்கள்!
பாட்டுக்கள் பாடியென்ன? பறக்கவிட்டுப் புறாக்களினை
படம் பிடித்துக் காட்டியென்ன! பாதைகளின் நடுவினிலே
இடம் பிடித்து நாடகங்கள் இயக்கித்தான் என்ன! நெஞ்சில்
இருக்கின்ற சமாதானம் எழுந்து வரப்போகிறதா?
ஒருபோதும் நடக்காது! உள்ளத்தை மாற்றிடாமல்
அமைதி பிறக்காது! அவனியிலே சமாதானம்
குமைந்த மனதைவிட்டுக் குபீரென்று பார்த்திருக்கவெளியேறி வந்திடாது!
வீண்விரயம் காலம் தான்!



படிப்பகம்

padippakam



துளிவிடத்தைப் பாலினிலே தூவவிட்டுக் கலந்தது போல்
இனத்துவேச நெய்வார்த்து இந்நாட்டை எரித்து நிதம்
சனங்களையே மோதவிட்டுச் சந்தோசம் காணுகின்ற
அரசியல் வாதிகளால் ஆனதுதான் இக்கொடுமை!
விரைந்து வரச் சமாதானம் விடுவார்களா இவர்கள்?

'மனிதர்கள் நாம் ஒன்று இந்த மண்மீது' எனும் உணர்வும்,
மனிதாபிமானத்தை மதிக்கின்ற நல்ல பண்பும்,
புனிதமுள்ள பிறர் மதத்தைப் போற்றுகின்ற பேரறிவும்,
கனிவிரக்கம் காட்டுகிற காருண்ணியம் நிறை மனசும்

எல்லோர்க்கும் வந்து விட்டால் எமதருகே சமாதானம்
உள்ளது எனும் உணர்வு ஓடிவரும், ஒங்களுக்குள்
மொழிச் சண்டை, மதச் சண்டை மோதல்களே இருக்காது!
வழிவழியே நாமும் நாம் வாழுகின்ற தாய் நாடும்

சந்தோசம் காணும்! சாகாது வெம்பகையால்!
குத்திநாம் எங்களெங்கள் குடிசைகளில் வாழ்ந்தாலும்
எந்தப் பிரச்சனையும் இருக்காது, மக்களிடம்
வந்து விடச் சமாதானம் வல்லிறையே இங்கு வாழும்.

எல்லோர் மனங்களையும் இளக வைக்க வேண்டுகிறேன்!
நல்லோர் படுந்துன்பம் நாட்டை வாழ வைக்காது!

திரும்பட்டும் வடபுலத்தின் திசைநோக்கி மக்களெல்லாம்!
விருப்பம் போல் அவர்கள் விட்ட வாழ்வைத் தொடரட்டும்!
நடந்ததெல்லாம் பொய்க்கனவாய் நாமெண்ணி மறந்திருப்போம்!
நடப்பவைகள் எல்லாமே நல்லவையாய் இருக்கட்டும்!

பிறக்கும் சமாதானம்! பேதங்கள் போய்த் தொலையும்!
சிறுபான்மை, பெரும்பான்மைச் சிக்கல்களே இருக்காது!
உறவுகளை எல்லோரும் ஒருதாயின் மக்களென
உருவாக்கி நாம் வளர்த்து, உலகமே பாராட்ட
வெற்றிக் கொடி பிடிப்போம்! வீர நடை பயில்வோம்!
பற்றுவைத்து இந்நாட்டைப் பரிமளிக்கச் செய்வோம் நாம்!
அகதிகளாய் வாழ்கின்ற அனைத்து முஸ்லிம், தமிழர்களும்
பகையுணர்வு இல்லாமல் பழையபடி அவரவர்கள்
சொந்த மண்ணில் வாழ்வமைக்க சொன்னபடி சமாதானம்
எங்கும் விரைந்து வர என்மனதில் ஆசை கொண்டேன்!
வருமா சமாதானம்? வருமென்ற நம்பிக்கை
உருவாகி இருக்கிறது ஓ! இறைவா வழிகாட்டு!

****



படிப்பகம்

padippakam



# வடக்கில் முஸ்லிம்கள் மீளக்குடியேறும் தருணம் வந்து விட்டதா?

கிளியூரான்

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் செயலாளரின் விசேட பிரதிநிதி திரு. ஒலரா ஒட்டுணு யுத்தத்தில் சிறுவர்கள் பயன்படுத்தப்படுகின் றார்கள்' என்ற வெளிவிவகார அமைச்சரின் முறைப்பாட்டில் உண்மையுள்ளதா? என்ப தைக் கண்டறிய இங்கு விஜயம் செய்திருந்தார்.

இவ்விஜயத்தின் முக்கியமாக இவர் வன்னிக்கு விஜயம் செய்து புலிகளின் முக்கிய பிரமுகர்களை சந்தித்துப் பேசியுள்ளார். அங்கே பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றி பேசப்பட்டது. எனக் கருதப்பட்டாலும் ஒலரா ஒட்டுனுவின் அறிக்கையில் முழுமை யான விபரங்கள் வெளியிடப்படவில்லை. வெளியிடப்பட்ட செய்திகளில் முஸ்லிம்க ளிடத்தில் ஆச்சரியத்தை உண்டு பண்ணிய செய்தி இதுதான்.

"இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்வதில் தடையாக இருக்கப் போவதில்லை." இவ்வறிவித்தலை புலிகள் ஒலரா ஒட்டுனுவிடம் தெரிவித்ததாக புலி களின் குரலும், ஒலரா ஒட்டுணுவின் செய்திக் குறிப்பை ஆதாரம் காட்டி செய்தி ஸ்தா பனங்களும் அறிவித்தன.

உண்மையில் மகிழ்ச்சிகரமானதும் வரவேற்கத்தக்கதுமான இவ்வறிவிப்பு வெளி வந்த சூட்டோடு ஒரு சிலர் 'மீளக் குடியேறும் நேரம் இதுதான்' அல்லது 'படிப்படியாக மீளக்குடியேறலாம்.' என பத்திரிகை மூலமாக கூறியிருப்பது வியப்புக்குரியது.

இவ்வறிவித்தலை மாத்திரம் வைத்துக் கொண்டு முஸ்லிம்கள் குடியேறலாமா? என்கின்ற விடயம் ஆழமான ரீதியில் அலசி ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

முதலில் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் எனக் குறிப்பிட்டுள்ள புலிகள் வடக்கு முஸ்லிம்கள் இடம் பெயர்ந்தவர்களா? அல்லது வெளியேற்றப்பட்டவர்களா? என்பதை உணர்ந்து தான் இவ்வறிவித்தலை விடுத்தார்களா?

மேலும் இவ்வறிவித்தல் பற்றி ஐ.நா. சபையோ, அல்லது ஐ.நா.சபையின் இலங்கைப் பிரதிநிதிகளோஇதுவரை மூச்சுக் காட்டாமல் இருப்பது ஏன்? என்பது ஆராயப்பட வேண்டும். இந்த விடயத்தை ஐ.நா.வின் பிரதிநிதியிடம் கூறியுள்ளதால் இக்கூற்றை இனியும் புலிகள் மீறமாட்டார்கள் என்ற நம்பிக்கை சில முஸ்லிம்களிடையே ஏற்பட்டதை அல்லது ஏற்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

முதலில் ஐ.நா.பிரதிநிதியும் ஒப்புக் கொண்டது போல் புலிகள் உண்மையாக நடந்து கொண்டார்களா? புலிகளின் படை களில் பெரிதும் இருப்பவர்கள் சிறுவர்கள் தான். எனினும் இவ்வுண்மை புத்திசாலித்த னமாக மறைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் சிறுவர்களை பயன்படுத்த மாட்டோம் என்ற உடன்பாடு எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பதும் கேள்விக்குரியே.

இரண்டாவதாக பொது மக்களைப் பலிக்கடாவாக்கப்போவதில்லை என்ற உடன்பாடும் கேள்விக்குள்ளாகியுள்ளது. தங்கள் பெயரை நேரடியாகப் பயன் படுத்தாமல் பண்டைய தமிழ் மன்னர்களுடைய பெயர்களைப் பயன்படுத்தி கொலை புரிவதில் புலிகள் ஈடுபட்டுள்ளார்களா? என்கின்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

மூன்றாவதாக முஸ்லிம்களின் நெஞ்சங் களில் என்றென்றும் மாறாத வடுக்கலாக பல பள்ளிவாசல் படுகொலைகள் இருந்த போதும், உடன்பாட்டின் பின் மீண்டும் ஒரு பள்ளிவாசல் படுகொலை! கொலை



படிப்பகம்

padippakam



செய்யப்பட்டவர் எதிரியாக இருந்தாலும் கொலை செய்யப்பட்ட இடம், சூழல் என்பவற்றுக்காக பள்ளிவாசலையும் தொழுகையையும் தேர்ந்தெடுத்த புலிகள் என்ன நியாயம் கூறப் போகின்றார்கள்.

இவைகள் தொடர்பாக சிந்தித்துப் பார்க்கும் போது புலிகளுக்கு முஸ்லிம்கள் தொடர்பாக மனமாற்றம். இன்னும் ஏற்பட வில்லையா? என கேட்கத்தோன்றுகின்றது. இவைகளினூடே விடுக்கப்பட்ட இவ்வறிவித்தல் புலிகள் திடீரென மனம் மாறிவிட்டார்களா? அல்லது திரு.ஒலரா ஒட்டுனு வந்திருந்த பிரதான விடயத்திலிருந்து திசை திருப்பி முஸ்லிம்களை விரட்டியதன் மூலம் சர்வதேச மட்டத்தில் தமக்கேற்பட்ட அபகீர்த்தியை அகற்றுவதற்கு இவ்வறிவித்தலை விடுத்து ஐ.நா. பிரதிநிதியை திருப்திப்படுத்தினார்களா? என்கின்ற சந்தேகங்களும் எழாமலில்லை.

மேலும் இவ்வறிவித்தல் புலிகளிடத்தில் முஸ்லிம்கள் தொடர்பாக உண்மையான மனமாற்றந்தான் என்பதை நிரூபிக்குமுகமாக கடந்த 8 ஆண்டுகளாக தங்கள் சிறைகளில் கைதிகளாக அடைத்து வைத்திருக்கும் வடக்கு முஸ்லிம்கள் அனைவரையும் அல்லது சிலரையாவது விடுதலை செய்து தமது மனமாற்றத்தை வெளிக்காட்டியிருக்கலாம். அரச படைகளில் இருந்து எதிரிகளாக செயற்பட்ட சிலரைக் கூட அவ்வப்போது விடுதலை செய்திருக்கும் புலிகள் இம் முஸ்லிம்களைப் பற்றிய தகவல்களைக் கூட வெளியிடாமல் இருப்பது ஏன்? புலிகள் இவர்களில் சிலரையாவது விடுதலை செய்திருந்தால் கடந்த 8 வருடங்களாக உறவுகளைப் பிரிந்து தவிக்கும் சொந்த பந்தங்களுக்கு பேராறு தலாகவும், உண்மை யாகவே புலிகள் மாறிவிட்டார்கள், என்ற மகிழ்ச்சிப் பெருமிதமும் நம்பிக்கையும் முஸ்லிம் களிடத்தில் ஏற்பட்டிருக்கும்.

எனவே வடக்கு முஸ்லிம்கள் வெறும் அறிவித்தலை மாத்திரம் வைத்துக் கொண்டு புலிகளை நம்பி விடுவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது. மேலும் இவ்வறி வித்தலை வெளியிட்ட புலிகள் பின்வருவன பற்றியும் தெரிவிக்க வேண்டும் என வடக்கு முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றனர். மீண்டும் தமது வாழ்விடத்தில் இருந்து வெளியேற்றப்பட மாட்டோம் என்ற தேசிய சர்வதேச உத்தர வாதம் உண்டா? ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படாது என்பது நிச்சயமா? எமக் குள்ள அரசியல் அபிலாசைகள் நிறை வேற்றப்படுமா?- பேச்சு, கருத்து சுதந்திரங்கள் பாதுகாக்கப்படுமா? இவைகள் பற்றிய பூரண தெளிவை முஸ்லிம்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய தேவை புலிகளுக்கு உண்டு.

ஆக இவற்றைப் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறாமல் வெறும் அறிவித் தலை மாத்திரம் நம்பி ஏமாந்து போகும் முஸ்லிம்கள் எமது சமூகத்தில் இப்போது இல்லை. பாமர முஸ்லிம் மக்களிடத்தில் இவைகள் பற்றிய தெளிவினை வழங்க வேண்டிய ஒரு சிலர் மீளக்குடியேறலாம் என்ற தோரணையில் பேசி, வருவது சுயலா பத்தின் அடிப்படையிலா என்ற சந்தேகம் வலுக்கின்றது.

மேலுமொரு விடயத்தை கவனத்தில் எடுப்போம். சென்ற வருட பிற்பகுதியில் மீள் குடியேற்றம் தொடர்பாக தம் இருப்பிடங்களை அவதானித்து வரச் சென்ற முஸ்லிம் மக்கள் அங்கிருந்து திரும்பியதும், மீள்குடியேற்றம் பற்றிய சிந்தனையை அடியோடு கைவிட்டி ருந்தனர். ஆனால் ஒரு சிலரின் நம்பிக்கை யூட்டல்களை நம்பி தாராபுரம் பகுதியில் மீளக் குடியமர்ந்த சுமார் 50 குடும்பங்களுக்கு எவ்வித மீள் குடியேற்றக் கொடுப்பனவுகளோ, ஏனைய உதவிகளோ, இல்லாமல் நட்டாற்றில் விடப்பட்டுள்ளோம் என்பதினை தேசிய தினசரிகள் மூலமாக தெரிவித்துள்ளார்கள்.

அதே போல் வவுனியா மாவட்டம் இராணுவ கட்டுப்பாட்டிற்கு வந்த பின்னர் அங்குள்ள கிராமங்களில் மீளக் குடியேறிய முஸ்லிம்கள், ஏனைய ஆயுதக் குழுக்களினால் சொல்லொன்னாத் துயரத்தை அனுபவித்து வருவதினை நேரிலே சென்று அவதானிக்கக் கூடியதாயுள்ளது.



படிப்பகம்

padippakam



இவைகளெல்லாம் எதனால் எனச் சிந்திப்போமானால் திட்டமிடப்படாத தூர நோக்குச் சிந்தனையற்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தான் காரணம் எனத் தெளிவாகக் கூற முடியும்.

ஆகவே தாயக மண்ணில் மீள் குடியேற்றமானது ஓர், இரு குடும்பங்கள் சென்று குடியிருப்பதனாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட விடுவிக்கப்பட்ட பகுதியில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய தொகையினர் குடியிருப்பதனாலோ ஆகி விட முடியாது.

எப்படி வடக்கிலே 1990க்கு முன் வாழ்ந்தோமோ அது போன்று மீளச் சென்று சமுதாய ஒற்றுமையுடன் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும்.

அதற்குரிய வழிகள் காணப்பட வேண்டும். அதற்குரியவர்கள் அதற்கான வழிகளைத் திறக்க வேண்டும். அதுவரையும் எமது உரிமைப் போராட்டத்தின் மூலம் அவ்வழிகளுக்கான கதவுகள் தட்டப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அது பலமாக ஓங்கித் தட்டப்பட வேண்டும் அதற்கு வடக்கு முஸ்லிம்கள் ஓரணியில் ஒன்று திரள வேண்டும். எமது ஒற்றுமையும் ஐக்கியமுமே எமது பலமாகும். இதுதவிர ஆளுக்கொரு கருத்தும் ஆளுக்கொரு இயக்கமுமாக இருந்து இதனை அடைந்து விட முடியாது. இது எமது பலயீனத்தன்மையின் அடையாளமாகவே கொள்ளப்படும்.

★★★★

## அகதிகள் அதிகரிப்பை தடுப்பதற்கு அரசாங்கமும் ஏனைய ஸ்தாபனங்களும் திட்டமிடல் வேண்டும்.

இன்று நாட்டில் புலம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் வெவ்வேறு இடங்களிலும் பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கஷ்ட ஜீவனம் நடத்துகின்றனர்.

நாடெங்கிலும் பரவிக்கிடக்கும் 733 முகாம்களில் 756445 பேர் வசிக்கின்றனர். அகதி முகாம்களுக்கு வெளியே மேலும் 503619 பேர் வசிக்கின்றனர்.

அகதிகளின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்தே வருகிறது. ஆனாலும் இந்த சோகமான நிலைமையைச் சீர் செய்வதற்காக ஒரு அரசாங்க கொள்கையோ, அரசு சார்பற்ற நிறுவனங்களின் தீர்வோ வகுக்கப்படவில்லை.

புலம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை கூடுதலாகக் காணப்படுவது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், புத்தளம், அம்பாறை மாவட்டங்களிலேயாகும். இந்த புலம் பெயர்வுக்கு பயங்கரவாத நடவடிக்கைகளே காரணிகளாக அமைந்துள்ளன.

யாழ்ப்பானத்திலிருந்து 530771 பேரும், மட்டக்களப்பிலிருந்து 219,449 பேரும், மன்னாரிலிருந்து 134,344 பேரும் அம்பாறையிலிருந்து 109453 பேரும் புலம் பெயர்ந்து அகதிகளாக உள்ளனர்.

இந்த நிலைமையை குறைப்பதற்கு உறுதியானதோர் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டியது மிக மிக அத்தியாவசியமாகும். இந்த நாட்டிலுள்ள அரசாங்கமும் அவ்வாறே அரசு சார்பற்ற நிறுவனங்களும் இந்தப் பிரச்சினையை மிக முக்கியமானதாக கருத வேண்டும். ஏனெனில் இவற்றில் பெரும்பாலான நிலைமைகள் தவிர்க்கக் கூடியவைகள் இருக்கின்றன.

ஏற்படவிருக்கும் ஒரு அழிவை தவிர்ப்பதற்கு உதவக் கூடியதாக வரப்போகிற நிலைமையைப் பற்றி மக்கள் அறிவதற்கும் சீரிய திட்டம் ஒன்று வகுத்தால் அது நன்மையாக அமையும்.

இவ்விதமான திட்டங்கள் அழிவுகளைக் குறைப்பதாக அமையப் போவதில்லை. ஓர் உறுதியான அழிவைக் குறைக்கும் வேலைத் திட்டம் இருந்தால் இயற்கையான அல்லது மனிதர்களால் உருவாக்கப்பட்ட அழிவுகளுக்கு உட்படக் கூடியவர்களைப் பாதுகாக்கக் கூடியதாக அமையும்.

**டாக்டர் கிருஷான் தெஹெரகொட**
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்*



படிப்பகம்

padippakam



# உரிமைக் குரலின் ஒலிகள்

## அமெரிக்காவில் NMRO வின் தலைவர்

"தெற்காசியப் பிராந்தியத்தில் இன அடிப்படையிலான மோதல்களைத் தவிர்த்தல்" என்ற கருப் பொருளிலான மூன்று வாரகால கருத்தரங்கு ஒன்று அமெரிக்கா விலுள்ள ஏழு மாநிலங்களில் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றது.

ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் (முன்னால்) தலைவரும், தற்போதைய போசகரும், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி S.H. ஹஸ்புல்லாஹ் இக் கருத்தரங்குகளில் பங்கு பற்றினார்.

இக்கருத்தரங்கு 1997 ஜூலை ஒகஸ்ட் மாதங்களில் நடைபெற்றது.

## அகதி மக்களோடு பத்திரிகையாளர்கள்

10.08.97 அன்று புத்தளத்தில் அகதிகள் கனிசமாக வாழும் முகாம்களுக்கு சண்டே லீடர் பத்திரிகையாளர்களை NMRO அழைத்துச் சென்றது. அகதிகளின் வாழ்வில் உள்ள அவலங்களை நேரில் கண்டறியும் ஆவலில் வீரகேசரி, தினகரன், சரிநிகர், தினக்குரல், மீள்பார்வை, சன்டேலீடர் நிருபர்கள் அகதி மக்களை அணுகி அவர்களுடைய துயரங்களை தங்கள் பத்திரிகைகளில் வடித்தனர். அங்கு கருத்து தெரிவித்த மக்கள் "நிரந்தரமாக சமாதானம் ஒன்று தோன்றாத வரை தாம் வடக்கில் குடியேறுவதில் அர்த்தமில்லை" என்றும் "அரசும் புலிகளும் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் தீர்வே பாதுகாப்பானது" எனவும் அம்மக்கள் தெரிவித்திருந்தனர்.

## அகதி மக்களோடு ரூபவாஹினி

01/02-9-97 ஆகிய தினங்களில் இலங்கை ரூபவாஹினி தயாரிப்பாளர் U.L யாக்கூப் தலைமையிலான படிப்பிடிப்பு குழுவினரை NMRO புத்தளம் பகுதியில் அகதி முகாம்களுக்கு அழைத்து சென்றது. அகதி மக்களோடு உரையாடி அவர்களுடைய பிரச்சினைகள் மட்டுமல்லாமல் அகதி முகாம்களின் சுகாதார சீர்கேடுகளையும் ஓலைக் குடில்களின் தன்மையையும் தனது ஒளிப் பதிவுக் கமராவுக்குள் வாங்கிக் கொண்டனர். அகதி மக்களின் பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளையும் சந்தித்து உரையாடினர். இந்நிகழ்ச்சி 26.10.97 மாலை 4 மணிக்கு ரூபவாஹினியில் ஒலி, ஒளிபரப்பப் பட்டமையால் நாடெங்கிலுமுள்ளோர் இம்மக்களின் நிர்க்கதியை நேரிலே காணும் வாய்ப்பு கிட்டியது.

## முஸ்லிம் சேவையில் கலந்துரையாடல்

27.10.97 அன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் அகதி மக்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. NMRO வின் போசகர் M.M மன்சூர் தலைவர் பொறியியலாளர் A.L புர்ஹானுத்தீன் செயலாளர் மௌலவி B.A.S சுபியான் ஆகியோர் கலந்து கொண்டு அகதி மக்களின் அபிலாஷைகள், பிரச்சனைகள் தொடர்பாக பலதரப்பட்ட கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

## கொடி வாரப்பிரகடணம்

26.10.97 தொடக்கம் 31.10.97 வரை ஏழாண்டு நினைவாக கொடிவாரம் பிரகடணப்படுத்தப்பட்டது. சமூக சேவைகள் பிரதி அமைச்சர் A.S.M அபூபக்கர் முதற் கொடியினைப் பெற்று கொடி வாரத்தை ஆரம்பித்து வைத்தார்.



படிப்பகம்

padippakam



## புகைப்படக் கண்காட்சி

27.10.97 அன்று கொழும்பு பிரதான வீதியிலுள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி கேட்போர் கூடத்தில் "அகதிகளின் அவலம்" என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சி நடாத்தப்பட்டது உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அல்ஹாஜ் செயித் அலவி மௌலானா அவர்கள் இதனைத் திறந்து வைத்தார். இதே கண்காட்சி 30.10.97 அன்று புத்தளம் இப்னு பதூதா அரங்கிலும் நடாத்தப்பட்டது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் I.M. இல்யாஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## மாபெரும் எழுச்சிப் பொதுக்கூட்டம்

31.10.97 அன்று புத்தளம் இப்னு பதூதா மண்டபத்தில் ஏழாண்டு பூர்த்தியை நினைவு கூறுமுகமாக மாபெரும் பொதுக் கூட்டம் தலைவர் கலாநிதி S.H ஹஸ்புல்லாஹ் தலைமையில் நடைபெற்றது. இங்கு பல கட்சிகளைச் சேர்ந்த வடமாகாணப் பாராளு மன்ற உறுப்பினர்கள் உரைநிகழ்த்தினர். EPDP த் தலைவர் டக்ளஸ் தேவாநந்தாவின் செய்தியை அறிவித்த பா.ம. உறுப்பினர் தங்கவேலு "மீள்குடியேற்றத்திற்கு EPDP உதவி புரிய தயாராகவுள்ளது எனவும், தமிழ் முஸ்லிம் சமூகங்கள் இரு கண்களைப் போன்றவை" எனவும் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய புளொட் தலைவர் தர்ம லிங்கம் சித்தார்த்தன் "உலகிலேயே எந்த வொரு சமூகத்திற்கும் நிகழ்ந்திராதகொடுமை வடக்கு முஸ்லிம்களுக்கு நிகழ்ந்துள்ளது" எனக் குறிப்பிட்டார். முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் I.M.இல்யாஸ், சமூகசேவைகள் பிரதி அமைச்சர் A.S.M. அபூபக்கர் ஆகியோரும் உரையாற்றினார்கள். விசேட உரை நிகழ்த்திய NMRO வின் தலைவர் கடந்த ஏழாண்டாக துன்பப்படும் இவ்வகதி மக்கள் விடிவு காண இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் வழி செய்ய வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார். NMRO வின் பொருளாலர் M.M.ஆமீன் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் S.M. நியாஸ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இறுதியாக செயலாளர் மௌலவி B.A.S. சுபியான் அவர்கள் நன்றி யுரை நிகழ்த்தினார். பல நூற்றுக்கணக்கான வடக்கு முஸ்லிம்களும் காஸ்மியா அரபிக் கல்லூரி மாணவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

31.10.97 அன்று புத்தளம் இப்னுபதூதா அரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அகதி மக்களின் வெளியேற்றம், தற்கால வாழ்வு, எதிர்பார்ப்பு போன்றவற்றை தத்துவ ரூபமாக மனாப்தீன் நெறியாள்கையில் இளைய அப்துல்லாஹ் கவிதை வடிவமாக்கி எழுச்சி பொங்கும் வகையில் குரல் கொடுத்து வாசித்த கவிதையின் ஒலிப்பதிவு நாடா வெளியிடப்பட்டது. முதற் பிரதியை காஸ்மியா அரபுக்கல்லூரி அதிபர் அப்துல்லாஹ் ஆலிம் அவர்கள் பெற்றுக் கொண்டார். "எங்கள் தாயகம் வடக்கே" என்பதே கவிதையின் மகுடமாகும்.

## நூல் வெளியீடு

31.10.97 அன்று புத்தளம் இப்னு பதூதா அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலாநிதி S.H. ஹஸ்புல்லாஹ் அவர்களினால் எழுதப்பட்டு வருகின்ற "இலங்கையின் இனப்பிரச்சனையும் பலவந்த மாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்" என்ற தலைப்பில் "முசலி முஸ்லிம்கள்" என்ற தொகுதி வெளியிடப் பட்டது. இதன் முதற் பிரதியை பிரதேச செயலாளர். M.M முஹினுதீன் அவர்கள் கையளிக்க புளொட் தலைவர் சித்தார்த்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## நூல் ஆய்வு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்ட முஸ்லிம் மக்களின் பாரம்பரிய வரலாறு, பலவந்த வெளியேற்றம், இழப்புகள் எதிர்பார்ப்புகள் தொடர்பான நூலை வெளியிட தேவையான ஆய்வுகளைப் பெறுவதற்கான கூட்டம். 9.11.97 அன்று



படிப்பகம்

padippakam



கொழும்பிலும் 14.11.97 அன்று புத்தளத்திலும் நடாத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட பலர்பல திருத்தங்களையும் ஆலோசனை களையும் முன் வைத்தனர்.

## அமைச்சர் பௌஸியுடனான சந்திப்பு

21.11.97 அன்று யாழ் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக அமைச்சர் பௌசியுடன் கலந்துரையாடிய NMRO குழு வினர் மீள்குடியேற்றம் தொடர்பான உண்மை களை எடுத்துக் கூறினர். தான் நிலைமைகளை அவதானித்து வருவதாகவும். இது குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் உறுதியளித்தார். புத்தளத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் செயலாளர் மௌலவி சுபியான் M.S.M. ஜான்ஸின் A.M கமால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யாழ் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான கருத்தறிதல்

10.12.97 அன்று கொழும்பிலும் 12.12.97 அன்று புத்தளம் பாதிமா மகளிர் கல்லூரி யிலும் யாழ் உள்ளூராட்சி தேர்தல் தொடர் பாக அகதி மக்களின் கருத்துக்கள் கேட்டறி யப்பட்டன. அங்கு கருத்து தெரிவித்த அகதி மக்கள் யாழில் முஸ்லிம்கள் குடியேறாத நிலையில் அரசு தேர்தலை நடத்துவதானது மனித உரிமைகளை மீறும் செயல் எனத் தெரி வித்திருந்தார்கள். பின் NMRO இத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா காங்கிரஸ் குழுவுடன் ஓர் சந்திப்பு

05.01.98 அன்று இனப் பிரச்சினைக் கான தீர்வு, அரசியல் நிலைமைகளை ஆராய் வதற்காக இலங்கை வந்திருந்த அமெரிக்க காங்கிரஸ் குழுவைச் சந்தித்து, மீள்குடி யேற்றம், அகதி வாழ்வு நிலைமை, உள்ளூராட்சி தேர்தல், அகதி முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பான வடக்கு முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகளை NMRO அவர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறியது.

## மீள்குடியேற்றம் தொடர்பான மக்கள் கருத்தறிதல்

தாயக மண்ணில் மீள் குடியேற்றம் தொடர்பாக அகதி மக்களின் முகாம்களுக்கு விஜயம் செய்து அவர்களின் கருத்துக்களை அறிவதில் ஈடுபட்ட NMRO பின்வரும் பல அகதி முகாம்களுக்கு விஜயம் செய்து கருத்துக்களை திரட்டிக் கொண்டது.

புத்தளத்தில் வாடகை வீடுகளில் வசிப்பவர்கள், தில்லையடி, நித்தனி, மன்னார் வீதி, அகதி முகாம்களுக்கான கருத்துக் கணிப்பு 17.12.97 அன்று புத்தளம் பாதிமா மகளிர் கல்லூரியிலும்; 12.1.98 மாலை ஒற்றைப்பனையடி பஸ்பராபாத் முகாமிலும் 17.01.98 மதியம் எறுக்கலம்பிட்டி முகாமிலும், இதில் SDA, EDA அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். இதே தினத்தில் மாலை கரம்பை உளுக்காப்பள்ளம் அகதி முகாமிலும்; 26.01.98 அன்று நொச்சியாகம அகதி முகாமிலும்; 10.2.98 இல் வவுனியா மாவட்ட கிராமங்கள் அனைத்துக்குமாக பட்டானிச்சூர் பள்ளிவாசல் மண்டபத்திலும்; 15.2.98 அன்று கொச்சிக்கடை அல்பலாஹ் மகா வித்தியாலயத்திலும் நடை பெற்றது. இங்கு பலதரப்பட்ட கருத்துக்களை அகதி மக்கள் முன்வைத்தனர். இவற்றுக்கான ஒன்றுபட்ட தீர்மானம் பேராளர் மாநாட்டில் எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

## பேராளர் மாநாடு

தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை களை அவதானித்து மீள்குடியேற்றம் தொடர் பாக யதார்த்தமாக உண்மைகளை ஆராய்ந்து ஒரு தீர்க்கமான ஐக்கியப்பட்ட தீர்மானங் களை எடுப்பதற்காக 23.03.98 அன்று புத்த ளம் நகர மண்டபத்தில் பேராளர் மாநாடு NMROவின் தலைவர் பொறியலாளர் A.L புர்ஹானுத்தீன் தலைமையில் நடைபெற்றது. அறிஞர்கள், கல்வி மான்கள், சமூகப் பிரமுகர் கள், அகதி அமைப்புக்களின் தலைவர்கள், அகதி முகாம்களின் தலைவர்கள், அடங்கிய பலர் இதிற் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். இதில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



படிப்பகம்

1. "வடக்கிலிருந்து 1990ல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தங்களது பாரம்பரிய பூமியான வடக்கிலேயே சென்று வாழ விரும்புகின்றனர்" ஆனால் யாருக்கும் சரணாகதியாக அல்ல, இதற்காக அரசுடனும் புலிகளுடனும் பேச்சுவார்த்தைகள் செய்யப்படல் வேண்டும். இப்பேச்சு வார்த்தை தேசிய சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், சமாதானத்தை விரும்பும் அமைப்புக்களின் மத்தியஸ்துடனேயே இடம் பெறல் வேண்டும். இப்பேச்சு வார்த்தைகளில் தற்போது வடக்கில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் சுய விருப்பத்தின் அடிப்படையில் சென்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுடைய நலன்களும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
2. மீண்டும் எமது தாயகமண்ணுக்குச் சென்று வாழும் வரையில் தற்பொழுது இருக்கும் இடங்களில் இம்மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.
3. இந் நடவடிக்கைகளை வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு இம் மாநாடு அங்கீகாரம் அளிப்பதுடன், அதற்க்கான ஆணையும் வழங்குகிறது. இத் தீர்மானத்தின் மூலம் வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்ற நடவடிக் கைகளை திட்டமிடப்பட்ட ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்கு வழிவகுத்துள்ளது.

இம்மாநாட்டின் செய்திகளையும் அகதி மக்களின் நிலைகளையும் அறிவதற்கு BBC சன்டேலீடர்நிருபர்களும் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்குNMROவின் இதுவரை கால நடவடிக்கைகளில் புகைப்படங்களாக எடுக்கப்பட்டவைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

## ஒலாரா ஒட்டுணுவோடு சந்திப்பு

9.05.98 இல் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதி நிதியாக இலங்கை வந்திருந்த திரு. ஒலரா ஒட்டுணுவை அமைப்பின் தலைவர் பொறியியலாளர் A.L புர்ஹானுத்தீனும் செயலாளர் மௌலவி B.A.S சுபியானும் வவுனியா மாவட்ட உறுப்பினர்களும் வவுனியா ஆண்டியாப்புளியங்குளத்தில் சந்தித்து ஐ.நா. செயலாளர் அனன் கொபியிடம் நேரடியாகக் கொடுக்கும்படி மகஜர் ஒன்றையும் கையளித்தனர். இம்மகஜரில் வடக்கு முஸ்லிம்களின் பிரச்சனைகளோடு 3 பிரதான கோரிக்கைகள் எடுத்துக் கூறப்பட்டது.

1. எமது பாரம்பரிய பூமியான வடக்கில் பாதுகாப்புடனும் உரிமைகளுடனுமான மீள்குடியேற்றத்திற்கு தகுந்த நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளை ஐ.நா. ஏற்படுத்த வேண்டும்.
2. இவ்வகதி மக்களின் அசையும் அசையாத சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கான நஷ்ட ஈட்டினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. மேற் கொள்ள வேண்டும்.
3. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு-புலிகள் உள்ளடக்கிய பேச்சுக்களின் போது எமது விவகாரத்தையும் உள்ளடக்கியதாகநிகழ்ச்சி நிரல்கள் அமைக்கப்படல் வேண்டும். என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

## எல்லாம் நன்மையே!

(அல்லாஹ்வை) நம்பிய ஒரு முஃமினுக்கு எல்லாமே நன்மையாக அமைந்துள்ளதை எண்ணி நான் வியப்படைகிறேன். (அது எவ்வாறெனில்) அவனது வாழ்வில் மகிழ்ச்சி ஊட்டக் கூடியவைகள் நிகழும் போது (அதற்குக் காரணமாக அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்தி விடுகிறான். அவனுக்கு அது நன்மை தரக் கூடியதாக ஆகிவிடுகின்றது. அவனது வாழ்வில் துன்பங்கள் நேரிடுகையில் (அல்லாஹ்வின் முடிவு இதுதான் என்று எண்ணி) சகித்துக் கொள்கிறான். அதுவும் அவனுக்கு நன்மை பயக்கக் கூடியதாக அமைந்து விடுகிறது. (ஆக ஒரு முஃமின் இன்பம் துன்பம் இரண்டு நிலைகளிலும், மறுமையில் நன்மை பயக்கும் விதமாக ஆக்கிக் கொள்ள முடியும்.) உண்மையான முஃமினைத் தவிர மற்ற எவருக்கும் இந்த பாக்கியம் கிடையாது என்று நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் – ஸுஹைப் (ரழி)
ஆதாரம் (முஸ்லிம்)

padippakam



**Pre planned eviction by armed threat, looting of personal belongings and plundering of household goods electrical fittings of the Muslims of the Northern part of Sri Lanka - October ' 90.**

Sri Lanka is a tiny Island of 17.5 million people and situated 18 miles South of India. The Muslims are spread out in all parts of the country with no extensive spatial concentration. They number 8% of the total population. There is historical evidence of permanent Muslim settlements from about the 7th century AD onwards. They have been living amicably with the majority Sinhala Community in the Sinhala predominant areas and the Tamil majority in areas in the Northern and Eastern parts of Sri Lanka. The Northern part of Sri Lnaka comprises the Administrative Districts of Jaffna, Mannar, Vavuniya, Mullaitivu and Kilinochchi and goes as the Northern Province. The Muslims constitute 5% of the, population in these five District taken as a whole. Till October '90 there were 75 distinct Muslim settlements with over 75,000 Muslims in the Northern part of Sri Lanka. There were also over 100 Mosques and 48 Government Muslim majority Schools - primary, secondary and senior secondary.

The Liberation Tigers for Tamil Eelam (LTTE) the most ruthless Tamil militant group fighting for a separate state in Sri Lanka and who were virtually running a **defacto** administration in the Northern Part of Sri Lanka, took the Northern Muslims completely by surprise and ordered the Muslims of the Districts of Mannar, Mullaitivu, Vavuniya, Kilinochchi and Jaffna to vacate their homes, leaving behind all their belongings or else face severe consequences. The Muslims of Jaffna were given only two hours notice on the 30th of October' 90 and forcibly evicted while the Muslims of the other four Districts mentioned herein were given two days notice between the 22nd and 24th of October 90. The Muslims of all these District pleaded with the LTTE to reconsider their decision to evict them. But they were determined and would not give in. The experience of the Muslims of Jaffna was that while the Muslims were packing up to go, the LTTE Cadre went house by house and relieved the women and children of all their gold and jewellery. Moreover the Head of each family was allowed to take with him only Rs 200/= for the expenses of the family vacating the North.

The entire ethnic cleansing of the Muslims from the North was completed on the 30th of October ' 90. The Northern Muslims who become destitutes overnight had to trek through difficult and unfamiliar terrain, cross lagoons, causeways and in the case of the Muslims of Mannar District even the high seas, to move into the neighbouring Districts outside the Northern Province. They were mostly accommodated in make shift camps by the Government and the Non Governmental Organisations. The little fortunate who had relatives and friends found accommodation with them. Even today after seven years of being forcibly evicted, the displaced muslims are mostly in the Welfare Centres in the Districts of Puttalam, Anuradhapura, Kurunegala, Colombo, Gampaha and Kalutara.

According to the statistics of the Government of Sri Lanka compiled in 1995, there are roughly 200 Welfare Centres housing 12,500 displaced Muslim families. There are yet another 5,420 displaced families living outside the Welfare Centres. One could therefore see the gravity of the situation.

*The North Is Our Home As Well*



படிப்பகம்

padippakam



After driving out the Muslims from the North, the LTTE had removed every article, from household goods to electrical fittings, plant, machinery and sold them out. Even from the Mosques the Holy Koran and other religious books, the fans and loud speakers were removed and sold. Copies of the Holy Koran and other scriptures were sold as old paper / books to book shops and gramsellers. The ponds where the Muslims took ablution in the Mosques were used as bathing ponds. Pictures of LTTE cadre who lost their lives in action were pasted inside the walls of the Mosques. In Jaffna District the Muslim burial ground was levelled by bulldozer and used as an LTTE military training ground. In many Districts the houses of Muslims have been razed to the ground so that even the boundaries of individual houses are beyond recognition.

Thirty five Muslims of the District of Jaffna were abducted by the LTTE before October 1990. Their whereabouts are yet not known. The International Red Cross Society operating in Sri Lanka has also failed to locate the whereabouts of these abducted Muslims.

Even after seven years these displaced Muslims do not see the green light to return to their permanent homes. Although the Government forces have taken control of certain areas in the Northern part of Sri Lanka yet the ground situation is not at all conducive to return to their homes.

The sufferings, inconveniences and personal embarassments the displaced Muslims are facing in the Welfare Centres is indescibable. The morals of the families have deteriorated. Psychologically too these displaced Muslims are badly affected. The health and educational facilities made available to the children are also not too satisfactory. In short the quality of life of these displaced Muslims is not what it was when they were in their own permanent homes.

The displaced Muslims have a **right to live** and honourably too. They should be provided with the necessary protection and guarantee that such situations do not occur in the future, and be resettled in their homes without further delay. The North is the home of the Muslims as well.

The International Community should bring pressure on the Government of Sri Lanka and the LTTE that the Muslims of the North have a legitimate right to return to their homes and all steps taken to ensure their return.

Last but least, adequate compensation must be paid to these affected Muslims for all that they have lost. After seven years the ground situation is that doors, windows, roof sheets, tiles etc. have all been removed from their homes. In very many of their homes even the super structure is not there.

It is most unfortunate that never in the history of Sri Lanka that a particular community was singled out for such deliberate, pre planned ethnic cleansing

Respectfully

Moulavi B.A.S. Sufyan (Yakuthi)
Secretary, **NMRO.**

*The North Is Our Home As Well*



படிப்பகம்

padippakam



## வடமாகாண முஸ்லிம்களின் பேராளர் மாநாடு

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு ஏற்பாடு செய்திருந்த "வடமாகாணத்தின் இன்றைய நிலையும் மீள்குடியேற்றமும்" எனும் தலைப்பில் யதார்த்தத்தை ஆராய்ந்து தீர்மானிப்பதற்கான வடமாகாண முஸ்லிம்களின் பேராளர் மாநாடு கடந்த 21.3.98 சனிக்கிழமை புத்தளம் நகரமண்டபத்தில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் பொறியியலாளர் ஏ.எல். புர்ஹானுத்தீன் தலைமையில் இடம்பெற்றது. இம்மாநாடு தாயக மண்ணில் வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடி யேற்றம் தொடர்பாக வடமாகாண முஸ்லிம்களிடத்தில் ஐக்கியப்பட்ட தீர்மானங்களை எடுப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இம்மாநாடு இரு அமர்வுகளாக இடம் பெற்றது. முதலாவது அமர்வில் பேராளர்களின் கருத்துரைகள் இடம் பெற்றது. இதில் பலதரப்பட்ட கருத்துக்களும் முன் வைக்கப்பட்டன. இரண்டாவது அமர்வில் தொகுப்புரையும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இம்மாநாட்டிற்கு, இம் மாநாட்டின் முன் ஏற்பாடாக, இத்தலைப்பில் ஏற்கனவே வடக்கு முஸ்லிம்கள் அகதிகளாக வாழும் புத்தளம், கொழும்பு, வவுனியா, கம்பஹா, அநுராதபுர மாவட்டங்களில் நடைபெற்ற ஒன்பது கூட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும், முகாம் தலைவர்களும், வடமாகாண அகதி அமைப்புக்களின் தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இதனைத் தவிர வடமாகாணத்தைச் சேர்ந்த விரும்பிய முஸ்லிம்கள் எவரும் பங்குபற்றலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்றி, ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தனர்.

**இறுதியாக இம்மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.**

1. வடக்கிலிருந்து 1990ல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தங்களது பாரம்பரிய பூமியான வடக்கிலேயே சென்று வாழ விரும்புகின்றனர். ஆனால் யாருக்கும் சரணாகதியாக அல்ல. இதற்காக அரசுடனும் புலிகளுடனும் பேச்சுவார்த்தைகள் செய்யப்படல் வேண்டும். இப்பேச்சுவார்த்தை தேசிய சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், சமாதானத்தை விரும்பும் அமைப்புக்களின் மத்தியஸ்துடனேயே இடம்பெறல் வேண்டும். இப் பேச்சுவார்த்தைகளில் தற்போது வடக்கில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் சுய விருப்பத்தின் அடிப்படையில் சென்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுடைய நலன்களும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

2. மீண்டும் எமது தாயகமண்ணுக்குச் சென்று வாழும் வரையில் தற்பொழுது இருக்கும் இடங்களில் இம்மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

3. இந் நடவடிக்கைகளை வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (என்.எம்.ஆர்.ஓ) தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு இம் மாநாடு அங்கீகாரம் அளிப்பதுடன், அதற்கான ஆணையும் வழங்குகிறது. இத் தீர்மானத்தின் மூலம் வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை திட்டமிடப்பட்ட ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்கு வழிவகுத்துள்ளது.

## உலகில் உள்ள அகதிகளில் கூடுதலானோர் முஸ்லிம்களே!

### ஐ.நா.வின் திடுக்கிடும் தகவல்

உலகின் அகதிகளாகவும், இடம் பெயர்ந்தவர்களாகவும் பெரும்பான்மையான முஸ்லிம்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிக பிராந்தியப் பிரதிநிதி முஹம்மட் புக்ரி கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஆகக்கூடிய தனிக்குழுவாக அகதிகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகில் உள்ள 22 மில்லியன் அகதிகளுள் 50 வீதமானோர் முஸ்லிம்கள். இடம் பெயர்ந்துள்ள 49 மில்லியன் உலக மக்களில் 70 வீதமானோரும் முஸ்லிம்களே.

உலக அகதிகள் நிலைமை தொடர்பான ஐ.நா. வருடாந்த அறிக்கையில் இந்த திடுக்கிடும் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த பல ஆண்டுகளாக முஸ்லிம் அகதிகளின் நிலைமை 70 வீதத்துக்கும் கூடுதலாக இருந்தது.

ஆப்கான் அகதிகள் அநேகர் தாயகம் திரும்பியுள்ளதால் இந்த நிலைமை குறைந்து காணப்பட்டுள்ளதாகவும் முஹம்மட் புக்ரி கெமிரோவில் தெரிவித்துள்ளார்.

உலகில் ஆகக்கூடுதலான அகதிகள் எண்ணிக்கையை ஆப்கானியர்களே கொண்டு இருப்பதாகவும் பிரஸ்தாப ஐ.நா. அறிக்கையில் தொடர்ந்து குறிப்பிட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 2 மில்லியன் ஆப்கன் அகதிகளுக்கு ஈரான் புகலிடம் வழங்கியது.

5 இலட்சத்துக்கு மேற்பட்ட ஈராக் அகதிகளும் அங்கு புகலிடம் பெற்றதாகவும் அந்த அறிக்கையில் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் முகாம்களிலும் கிராமங்களிலும் மற்றும் 1.2 மில்லியன் ஆப்கன் அகதிகள் வசிப்பதாகவும் பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எப்.எம்.பைரூஸ்**



படிப்பகம்

padippakam



# 'அகதி' கட்டுரை, கவிதைப் போட்டிகள்

1. போட்டிகள் இரு பிரிவுகளாக நடாத்தப்படும்.

*பிரிவு (அ)*

பிரிவு (அ) ஜீ.சீ.ஈ. உ/த இரண்டாம் ஆண்டு உட்பட கல்வி பெறும் மாணவர்களுக்கானது. ஜீ.சீ.ஈ. உ/த பரீட்சை எழுதியோர் பங்கு பற்ற முடியாது. பங்குபற்றும் மாணவர் பாடசாலை அதிபர் மூலம் கல்வி பெறும் ஆண்டையும், சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்தி அனுப்ப வேண்டும்.

*பிரிவு (ஆ)*

மாணவரல்லாத எவரும் பங்கு பற்றலாம். ஆக்கம் சொந்தமானது என்பதை ஒரு கடிதத்தில் உறுதிப்படுத்துவதோடு ஒரு சமாதான நீதவான், சட்டத்தரணி, அதிபர் ஆகியோரில் ஒருவரினால் உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## பொது நிபந்தனைகள்

1. ஆக்கம் சொந்தமானதாகவும், பிரதி செய்யப்படாததாகவும் சொந்தக் கையெழுத்திலும் இருக்க வேண்டும்.
2. பூள்ஸ்கெப் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்படல் வேண்டும்.
3. தமிழ் மொழியில் மாத்திரமே எழுதப்பட வேண்டும்.
4. 'அகதி' இதழ் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.
5. அகதி 12 உள்ள விண்ணப்பத்தையே விண்ணப்பதாரர் பயன்படுத்த வேண்டும்.
6. கட்டுரைக்கான தலைப்பு:-

   ***வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளை மீட்பதுவும், பாதுகாப்பதுவும் எப்படி?***

   (தெளிவான எழுத்தில் 10 பக்கங்களாவது எழுதப்பட வேண்டும்.)

## கவிதை - மேலதிக நிபந்தனைகள்

1. கருப்பொருள்:-
   - i. **அகதி வாழ்வின் அவலங்கள்**
   - ii. **வெளியேற்ற நினைவுகள் (1990 ஒக்டோபர்)**
2. தெளிவான எழுத்தில் 6 பக்கங்களுக்குள் அமைய வேண்டும்.
3. கவிதை எழுச்சிகரமானதாகவும் இருக்க வேண்டும். சபையில் வாசிப்பதற்கும் கவிஞர் தயாராக இருக்க வேண்டும். இரு பகுதியினரிலும் முதலாம் இடத்தைப் பெறுவோருக்கு ரூபா 1000 ரொக்கமாக வழங்கப்படும்.

***விண்ணப்ப முடிவுத் திகதி 15.10.98***

முன்அட்டைப்பட உதவி
© M.K.M. ஷகிப்

☆☆☆☆



படிப்பகம்

padippakam



# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் :-..............................................................

நிரந்தர முகவரி :-..............................................................

..............................................................

தற்போதைய முகவரி :-..............................................................

..............................................................

பிறந்த திகதி :-..............................................................

தொழில் :-..............................................................

தொழில் முகவரி:- ..............................................................

..............................................................

**மாணவராயின்**

கல்வி ஆண்டு :-..............................................................

கல்வி கற்கும் பாடசாலை :-..............................................................

பிரிவு :-..............................................................

பங்குபற்ற விரும்பும் போட்டி :-..............................................................

தெரிவு செய்துள்ள தலைப்பு :-..............................................................

..............................................................

இவ் ஆக்கம் என்னால் எழுதப்பட்டது எனவும் இதற்கு முன்னர் பிரசுரிக்கப்படாதது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................................................

விண்ணப்பதாரி

**உறுதிப்படுத்துவோர்**

பெயர் :-..............................................................

விலாசம் :-..............................................................

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆக்கமானது இவரது சொந்த ஆக்கம் என்பதை இத்தாள் உறுதிப்படுத்துகின்றேன்.

**அதிபர்** சமாதான நீதிவான் சட்டத்தரணி

.............................. .............................. ..............................



படிப்பகம்

padippakam

# 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'
# NORTHERN MUSLIMS' RIGHTS ORGNIZATION" (N.M.R.O)

பிரதான குறிக்கோள்

1. மீண்டும் பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.
2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவண இழப்பீடுகளை மீளப்பெறும் உரிமை.
3. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.
4. வட மாகாணத்தில் மீளக் குடியேறும் போது அச்சமின்றி தனித்துவத்தோடும் பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை.

**மேற்படி குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் செயல் திட்டங்களை இவ்வமைப்பானது நடைமுறைப்படுத்தும்.**

1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளி விபரங்களைத் திரட்டுவது.
2. அவர்கள் மத்தியில் எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துதல்.
3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும், அகதிகள் தொடர்பாகவும் அறிவை வழங்குதல்.
4. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடுகள் போன்றவற்றை நடத்துதல். இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களை பிரசுரங்களாக வெளியிடுதல்.
5. அரசியல் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காகத் தயார்படுத்தல்.
6. இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு தேசிய, சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்துதல் என்பனவாகும்.


இவ்வமைப்பில் அங்கம் வகித்து, தாயக மண்ணை மீட்பதற்கும், எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வர விரும்புவோர் இதன் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**செயலாளர்,**
***வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு***
***15ஏ, ரோகினி வீதி, வெள்ளவத்தை,***
***கொழும்பு - 6***

படிப்பகம்

padippakam



1990 ஒக்டோபரில் புலிகளினால் திக்குத்திசை தெரியாமல் நடுக்கடலில் விடப்பட்ட வடக்கு முஸ்லிம்களுக்கு கரம் கொடுத்தது கல்பிட்டி இறங்குதுறை.

அகதி இதழ் 15 A, ரோஹினி வீதி கொழும்பு 6 வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினரால் ஏ.ஜே பிரின்ட்ஸ் இல. 44 ஸ்டேசன் வீதி, தெஹிவளையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்